பாரதி நினைவு மலர்

★

பாரதி நூல்களைப் பதிப்பிக்கும் உரிமையுடைய வர்களான பாரதி பிரசுராலயத்தார் பெரிய மனது செய்து, பாரதி மண்டபத் திறப்பு விழாவை யொட்டி, பாரதியாரின் பதினாறு பாடல்களை அச்சிட்டு ஞாபகார்த்தப் பதிப்பு வெளியிட அநுமதி தந்திருக்கிறார்கள்

★

உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் சித்திர விசித்திர வர்ண அலங்காரங்களுடன் மேற்படி பாடல்களை இணையற்ற சௌந்தரிய வடிவமாக வெளியிட ஏற்பாடு நடந்து வருகிறது.

பாரதி நினைவு மலர்

பிரதி ஒன்றின் விலை ரூ. 3

★

இந்தப் புத்தக விற்பனையில் கிடைக்கும் லாபம் அவ்வளவும் பாரதி மண்டப நிதிக்காவது மண்டபத் திறப்பு விழா நிதிக்காவது சேரும். கால நிலையையும் காகித நிலையையும் ஒட்டிச் சொற்பப் பிரதிகள்தான் அச்சிடப்படுகின்றன. "கல்கி" காரியாலயத்திலாவது, "கல்கி" ஏஜெண்டுக ளிடமாவது முன் பணம் கொடுத்துப் பிரதியை உறுதி செய்து கொள்வது நல்லது

★

தபால் மூலம் பெற விரும்புவோர் ரூ. 3—8—0 "கல்கி" காரியாலயத்துக்கு அனுப்ப வேண்டும்.

முன் பணம் அனுப்பினால்தான் பிரதி அனுப்ப இயலும். வி. பி. பி. கிடையாது

மானேஜர், "கல்கி" கீழ்ப்பாக்கம், சென்னை


ஆஹா-இந்த துண்டு எவ்வளவு சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்கிறது!
அதுவா, நான் ஸன்லைட் உபயோகிக்க ஆரம்பித்திருப் பதனுல் தான்!
ஸன்லைட் சோப்பினுல் துணிகளை சலவை செய்ததும் அவை முன் இருந்ததைவிட சுத்தமாகவும் பளிச்சென்று மிருக்கின்றன. ஸன்லைட்டின் ஏராளமான நுரை துணியின் ஒவ்வொரு இழைகளிடையேயும் புகுந்து—ஜாஸ்தி அழுக்குப் படிந்த பாகங்களிலிருந்துகூட—அடித்துத் துவைக்கவேண்டிய அவசியமில்லாமலே பூரா மலினங்களையும் சுலபமாக அகற்றுகிறது. உங்கள் துணிகளுக்கு இனியதொரு புதுமையும் மணமும் தருவதுடன் ஸன்லைட் சோப் உங்கள் கைகளுக்கும் நன்மையளிக்கின்றது.
ஸன்லைட் சோப்
SUNLIGHT SOAP
S. 91-23 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

Be Smart - use Gevaert

குறிப்பாகப் படமெடுக்க

போட்டோவைத் தொழிலாகக் கொண்டவர்களுக்கும் சரி, பொழுது போக்காகக் கொண்டவர்களுக்கும் சரி, உங்கள் காமிராவிற்கு மிகப் பொருத்தமான அதிவேகம் பொருந்திய பிலிம் இதோ இருக்கிறது—வீட்டினுள் எடுப்பதற்கும் வெளிப்புறக் காட்சிகளுக்கும் உகந்தது. கேவார்ட்ஸ் பான்க்ரோமோஸாவின் வர்ண பேத சக்தி ஓர் பிரத்யேக அம்சம்.

உள்ளூர் போட்டோ சாமான் விற்பனையாளரிடம் பாருங்கள்



இந்தியாவில் மொத்த விற்பனையாளர்கள்

அல்லைய்ட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்

பம்பாய் - கல்கத்தா - மதராஸ்



NTK 197 TM

'ZEPHROL'

ஜெப்ரால்

இருமல் ஸிரப்



எம். அண்டு பி.
கம்பெனியின் தயாரிப்பு

M&B

குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும்
தேவையானது.

மே அண்டு பேக்கர்

MAY & BAKER

(1)

குழந்தை அழுகிறது



(ஒரு காரணமுமின்றி)

(2)

அதற்கு

கிரைப் ஸிரப்



கொடுங்கள் (அருசி யில்லாதது)

(3)

குழந்தை சிரிக்கிறது



ITL தயாரிப்பு

தயாரிப்பவர்கள் :
மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங்
லாபரடேரி லிட்., மல்லேஸ்வரம்,
பெங்களூர்

விற்பனை ஏஜண்டுகள் :
மெஸ்ஸர்ஸ். பெஸ்ட் அண்டு கம்பெனி, லிமிடெட், த. பெ. நெ. 63, மதராஸ்



VWR. 23-23 TM. VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 இதழ் 10 | அக்டோபர் 5 | சர்வஜித்து ஹு புரட்டாசி 19

என்ன சேதி?	...	... 9
அன்று விதைத்த வினை!	சாஸ்திரி	... 11
பாக்கியம் பெற்றோம்!	...	... 13
பரமபதமே போலும் இந்த உருவம்!	டி. கே. சி.	... 18
பாரதி மண்டபத் திருவிழா	...	... 20
பாணிக்கிரகணம்	கே. எஸ். எஸ். ராகவன்	... 26
பாப்பா மலர்	பி. வி. பலராமன்	... 33
மீன் சாமியார்	ம. சி. கல்யாணசுந்தரம்	... 37
சந்திர ஹாரம்	பிரேம்சந்த்	... 42
காலக்ஷேபம்	...	... 48
சண்பகப் பூ	வேங்கடலட்சுமி	... 49

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

இந்திய மக்கள் மேல்நாட்டு நாகரிகத்திலே மதிமயங்கி, இந்திய நாகரிகத்தையும் கலைகளையும் தங்களுடையது என்று சொல்லிக்கொள்ள வெட்கப்பட்ட காலத்திலே, ஸ்ரீமதி பெஸண்ட் இந்தியாவுக்கு வந்தார்; இந்திய நாகரிகத்தின் பெருமையை இந்திய மக்களுக்கு மாத்திரம் அல்ல, உலகத்துக்கே எடுத்து விளக்கினார்.

ஸ்ரீமதி பெஸண்ட் ஆரம்பித்த 'ஹோம்ரூல்' இயக்கம்தான் இந்த தேசமக்களிடையே முதல் முதலாக தேசபக்தியும் சுதந்தர ஆவேசமும் உண்டாவதற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்தது. "சுயராஜ்யம் என்னும் வார்த்தையை ஒவ்வொரு இந்தியன் வாயிலும் புகுத்தியது அன்னிபெஸண்ட் அம்மையே என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்" என்று மகாத்மா காந்தி சொன்னது முற்றிலும் உண்மையேயாகும்.



ஸ்ரீமதி பெஸண்ட் அளவுகடந்த தைரியம் படைத்தவர். இணையற்ற நாவன்மை படைத்தவர். அற்புதமாக எழுத வல்லவர். காங்கிரஸ் மகாசபையின் தலைமைப் பதவியில் அமர்ந்த முதல் ஸ்திரீ அவர்தான்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அஞ்சா நெஞ்சுடன் அவர் நடத்திய போராட்டம் இந்திய சரித்திரத்திலே என்றும் மங்காப் புகழ்பெற்று விளங்கும்.

அரசியல் துறையிலும் சமூகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் ஸ்ரீமதி பெஸண்ட் இந்தியாவுக்குச் செய்திருக்கும் சேவைகள் கொஞ்ச நஞ்சம் அல்ல.

அவருடைய தன்னலமற்ற சேவைகளைக் கண்டு மகிழ்ந்த இந்திய மக்கள், ஸ்ரீமதி அன்னிபெஸண்டை 'அன்னை' பெஸண்ட் என்று அழைத்ததில் வியப்பு எதுவும் இல்லை.

• •

இத்தகைய மகத்தான தேசோபகாரியின் நூறாவது பிறந்த தினக் கொண்டாட்டத்தைச் சென்ற புதன்கிழமையிலிருந்து பாரததேசம் முழுவதும் கொண்டாடுவதென்று ஏற்பாடு செய்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க விஷயமாகும். இந்த விழாவை, தேசம் சுதந்தரம் பெற்ற இந்தச் சமயத்தில் கொண்டாடுவது ரொம்பவும் பொருத்தமானதாகும். இதை யொட்டி, ஸ்ரீமதி பெஸண்டின் படத்தையும், அவர் பல வருஷங்கள் வரை தலைவராக இருந்துவந்த சென்னை தியாஸபிகல் சொஸைட்டியின் அழகிய முன்வாசல் பகுதியையும் நம்முடைய இந்த இதழ் அட்டையில் மகிழ்ச்சியுடன் வெளியிட்டிருக்கிறோம்.

ரோஜா மார்க் நெய்

"நல்ல மண்வாக்குள்ள கிராமங்களில், வரத் தட்டு, பருத்திவிதைகளை ஏராளமாகக் கொடுத்து வளர்க்கப்பட்ட பசு, எருமைகளினின்றும் கிடைக்கும் புத்தப் புதிய வெண்ணெய்களைக் கொண்டு, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது.

எல்லா ஊர் கோவாபரேடிவ் ஸ்டோர்களிலும் 3 வி., 12 வி. டின்களில் கிடைக்கும். கோவையில் 14/86, ஒப்பணக்கார வீதியிலும், ஆர். எஸ். புரம் ஸ்டோரிலும் கிடைக்கும்."

லிங்கம் & கோ., கோயமுத்தூர்

சற்று கவனியுங்கள்
உங்களிடம் "பார்கோ"

சுருட்டுகள்

எப்பொழுதும் நீங்கள் சுருட்டு வாங்கும் பொழுது சற்று கவனித்து "பார்கோ" சுருட்டை வாங்குங்கள். எப்பொழுதும் நீங்கள் சுருட்டு உபயோகிக்கும் பொழுது, சற்று கவனித்து "பார்கோ" சுருட்டை உபயோகியுங்கள்.

முதன் முதலாக எங்கும் ஒரே விலை, குணத்துடன் விற்கப்படுபவை "பார்கோ" சுருட்டுகள்தான்.



நீங்கள் வாங்கும் அல்லது உபயோகிக்கும் சுருட்டில் இந்த மார்க இருக்கிறதா என்று பாருங்கள



இந்தியன் டுபாக்கோ கம்பெனி லிட்.,
(மானேஜிங் ஏஜண்ட்ஸ்: பார்த்தா கம்பெனி)
தபால் பெட்டி, 159. . . . . . மதராஸ்.

FAS.ITC-1.

கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதி | இதழ் 10

என்ன சேதி?

சிறிய உருவம், பெரிய விஷமம்

கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா? உருவம் சிறியதாயினும் விஷமம் பிரமாதமாக இருக்கிறது. சண்டைக்காய்ப் பிரமாணமுள்ள சமஸ்தானங்களும் ஓர் ஆட்டம் ஆடித்தான் அடங்குகின்றன. திருவாங்கூர் என்ன, இந்தூர் என்ன, போபால் என்ன, இன்னும் சில அனாமதேய சமஸ்தானங்கள் என்ன, எல்லாம் முதலில் துள்ளிக் குதித்தன. துள்ளிக் குதித்ததன் விளைவாகக் குப்புற விழுந்து மூக்கு உடைபடவே, புத்தி வந்து பெட்டிப் பாம்புபோல் அடங்கி விட்டன. அப்படியிருந்தும்கூட இன்னும் இரண்டொரு சமஸ்தானங்கள் நாசகரமான எதேச்சாதிகார வெறியை விட்டபாடில்லை.

'என் பங்கு சொத்தையோ?'

சுண்டைக்காய் அளவுள்ள சமஸ்தானங்களின் நிலைமை அவ்வாறு இருந்து வருகையில், கடுகு போன்ற ஒரு சமஸ்தானம் ஒரு மூலையிலிருந்து 'என் பங்கு சொத்தையோ?' என நிமிர்ந்து ஒரு கூக்குரலைக் கிளப்பி யிருக்கிறது. இதுவரையில் யாரும் கேள்விப்படாத அனாமதேய சமஸ்தானங்களில் ஒன்றாக இருந்த ஜூனாகாத் ஒரு குட்டி யுத்தத்துக்குக் கூடத் தயாராகி விட்டது! அந்தச் சமஸ்தானத்தின் ஜனத்தொகை நம் சென்னை நகர ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்காகும். அதன் வருஷ வருமானமோ முக்கால் கோடிக்கும் இழுத்துப் பறித்துக் கொண்டிருக்கிறது. பூகோள ரீதியாக ஐக்கிய இந்தியாவுக்குட்பட்ட ஜூனாகாத்,— ஜனத்தொகையில் எண்பது சதவிகிதத்துக்கு மேல் ஹிந்துக்கள் உள்ள ஜூனாகாத், ஐந்நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள பாகிஸ்தானில் சேர்ந்திருக்கிறதென்றால், அது ஒரு பெரிய விஷமத்தனம்தானே?

ஜூனாகாத் நவாப் அவ்வாறு நிர்மானித்து விடவில்லையென்றும், அந்த நவாபை ஆட்டி வைத்து வரும் சதிகாரக் கும்பலே மேற்படி விபரீதத்துக்குக் காரணமென்றும் நவநகர் மண்டலாதிபதியான ஜாம்சாகேப் கூறுகிறார்; ஆதார பூர்வமான பத்திரிகைச் செய்திகளும் கூறுகின்றன. அந்த விபரீதத்தைக் கண்டித்து, ஜூனாகாத் சர்க்காரை வீழ்த்துவதற்காகப் போட்டி சர்க்காரும் ஏற்பட்டு, அவர்கள் ராஜ்கோட்டிலுள்ள ஜூனாகாத் நவாப் மாளிகையையும் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டார்கள். ஜூனாகாத்தின் போக்கு எதில் வந்து முடியுமோவென்று கத்தியவார் சமஸ்தானங்கள் கதிகலங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த சமஸ்தானங்களுக்குப் பாதுகாப்பளித்து ஜூனாகாத்துக்குப் புத்தி புகட்ட இந்திய சர்க்காரும் முனைந்திருக்கின்றனர். இவ்விதம் வினையை விலைக்கு வாங்கிக் கொண்டுள்ள மேற்படி சமஸ்தானத்தை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்!

நிருபர் அகராதி

பிரிட்டிஷ் பத்திரிகாலய மொன்றில் புதிதாகச் சேர்ந்த நிருபருக்கு அன்று துரதிர்ஷ்டவசமாக ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. எனவே, அவர் வெறுங் கையுடன் ஆசிரியரிடம் போய், 'இன்று செய்தி யொன்றும் கிடைக்கவில்லை' என்றார். பத்திரிகாசிரியருக்கு ஒரேயடியாகக் கோபம் வந்து விட்டது. ஏனெனில், 'ஒரு செய்தியும் கிடைக்கவில்லை' என்ற வாக்கியமானது பத்திரிகை நிருபரின் அகராதியில் இருக்கக் கூடாதென்பது அவருடைய உறுதியான கொள்கை. எனவே அவர், 'பேஷ்! செய்தியொன்றும் கிடைக்கவில்லையா? கிடைக்காவிடில் ஏதாவதொரு செய்தியைச் சிருஷ்டியுங் காணும்' என்று கட்டளை விட்டார். அது

முதல் மேற்படி நிருபர் கயிறு திரிக்கும் வேலையில்—அதாவது உண்மைச் செய்திகளைக் காட்டிலும் கற்பனைச் செய்திகளைக் கொடுப்பதிலேயே தமது முழு கவனத்தையும் செலுத்த முற்பட்டார்!

முதலாவது உலக யுத்தத்தின்போது, தினந்தோறும் பிரிட்டிஷ் துருப்புகள் முன்னேறும் மைல் கணக்கை உலகப் பிரசித்தி பெற்ற பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூடப் பிரசுரித்து வந்தன. ஓர் அதிகப் பிரசங்கி மேற்படி புள்ளி விவரங்களைத் தொகுத்துக் கொண்டே வந்தார். திடீரென்று ஒருநாள் அவர், 'இதுவரை பத்திரிகையில் வெளியாகியுள்ள கணக்கின்படி பார்க்கப் போனால், பிரிட்டிஷார் ருஷியாவில்கூட பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருக்க வேண்டுமே! ஆனால், உண்மையில் பிரிட்டிஷ் படைகள் இன்னும் ஜெர்மனி எல்லையைக்கூட மிதிக்க முடியவில்லையே' என்று அப்பட்டமாகக் கூறி மேற்படி பத்திரிகைகளின் குட்டை வெளிப்படுத்தி விட்டார்.

பிரிட்டிஷ் பத்திரிகைகளின் சரித்திரத்தில், இவை போன்ற எண்ணிக்கையற்ற சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. மற்றும் பொதுவாக மேல்நாட்டுப் பத்திரிகைகளில் அடிக்கடி கற்பனைச் சரக்குகள் வெளியாவது சகஜமென்பது உலகமறிந்த விஷயமே.

கயிறு திரிக்க வேண்டாம்!

இந்தியாவில் நிகழ்ந்து வரும் சம்பவங்களைக் குறித்துக் கற்பனைச் சரக்குகளை அனுப்ப வேண்டாமென்று சமீபத்தில் இந்தியாவின் முடிசூடா மன்னரான நேருஜி வெளி நாட்டுப் பத்திரிகை நிருபர்களைக் கேட்டுக் கொண்டார். இந்தியாவுக்குப் பாதகமாயினும், உண்மையான செய்திகள் அனுப்புவது பற்றி இந்திய சர்க்காருக்கு அணுவளவும் ஆட்சேபனை யில்லை. அப்படியிருந்தும்கூட, இந்திய சர்க்கார் செய்திகளைத் தணிக்கை செய்ய ஆரம்பித்திருப்பதாக பிரிட்டனில் கூக்குரல் ஏற்பட்டு விட்டது.

ஆனால் மேற்படி கூக்குரலுக்கு, லண்டனிலுள்ள இந்திய ஹை கமிஷனரான ஸ்ரீ கிருஷ்ண மேனன் சரியான பதில் கொடுத்திருக்கிறார். "பிரிட்டிஷாரின் செய்தித் தணிக்கைக் கொடுமையால் இந்தியாவைக் காட்டிலும் துன்பமுற்ற தேசம் வேறெதுவு மில்லை. இந்தியத் தலைவர்களின் படங்களைப் பிரசுரித்த ஆசிரியர்களுக்குக் கூடச் சிறைத் தண்டனை யென்று சட்டம் விதிக்கப்பட்டது. அத்தகைய தணிக்கை அநீதியை ஒழித்த இந்தியா, இப்போது செய்திகளைத் தடை செய்வதாகக் கூறுவது ஆதாரமற்ற கூற்றாகும். டில்லியில் ஏற்பட்ட கலகத்தில் ஐந்து லக்ஷம் பேர் மாண்டனரென்று பிரிட்டிஷ் நிருபர் ஒருவர் இந்த நாட்டுக்குச் செய்தி அனுப்பி யிருந்தார். அத்தகைய அபாண்டமான புளுகுகளைக் கற்பனை செய்து அனுப்பாதீர்கள் என்றே இந்திய சர்க்கார் கூறி யிருக்கிறார்கள்" என்று ஸ்ரீ மேனன் உண்மையை விளக்க வைத்திருக்கிறார்,

சமீபகாலமாக அத்தகைய புளுகுச் சரக்குகளை ஆதாரமாகக் கொண்டு 'டைம்ஸ்' 'மாஞ்செஸ்டர் கார்டியன்' போன்ற செல்வாக்குள்ள பத்திரிகைகளும் இந்தியாவுக்கு விரோதமாகத் தலையங்கங்கள் எழுதியிருக்கின்றன. எனவே, இந்தியாவிலுள்ள அன்னியப் பத்திரிகை நிருபர்களை இந்தியா கேட்டுக்கொள்வது என்னவென்றால், 'உண்மைச் செய்திகளை அனுப்புங்கள். பொய்களைப் புனைந்து இந்தியாவின் துன்பங்களைப் பன்மடங்கு அதிகமாக்கி விடாதீர்கள்' என்பதேயாகும்.

<u>கவனியுங்கள்!</u>

"கல்கி" சிறுகதைப் போட்டி

முடிவு தேதி 31—10—47 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது

★

இந்த வருஷத்துப் பஞ்சாயத்தார்:

1. ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார், பி. ஏ., பி. எல்., குற்றாலம்.
2. ஸ்ரீ ஏ. என். சிவராமன், ஆசிரியர், "தினமணி," சென்னை.
3. ஸ்ரீ ரா. நாராயணன், பி. ஏ., பி. எல்., தலைவர், எழுத்தாளர் சங்கம்.
4. ஸ்ரீ க. ஆர். கோவிந்தன், ஆசிரியர், "ப்ரீ இந்தியா," சென்னை.
5. ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி, ஆசிரியர், "கல்கி," சென்னை.

அன்று விதைத்த வினை!


1946.
பிரச்னை தீர ஒரே வழி ஜனப்பரிவர்த்தனையே
ஆம், ஆம்!
1947- ஆகஸ்டு
ஹ, ஹா! நான் அப்போதே சொல்ல வில்லையா?
1947-செப்டம்பர்
ஐயோ! என்ன அநியாயம் பாருங்கள்! இந்த மூட்டைகளை யெல்லாம் என் கழுத்தில் கட்டி விட்டார்களே!
SHASTRI

வாழ்க, மகாத்மா!



பாக்கியம் பெற்றோம்!

பாரத நாட்டில் பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் செய்த அட்டூழியங்களைக் கண்டித்த வண்ணம் தொண்டு கிழவரான தாதாபாய் நௌரோஜி தேக வியோகமானார்.

'சுயராஜ்யம்', 'சுயராஜ்யம்' என்று ஜபித்தவாறு பால கங்காதர திலகர் புகழுடலெய்தினார்.

"இந்தியா சுயராஜ்யம் பெறுவதைப் பார்க்க எனக்குக் கொடுத்து வைக்கவில்லையே!" என்று ஏங்கிய வண்ணம் பண்டித மோதிலால் நேரு பரமபதம் அடைந்தார்.

சுதந்திரம் பெறும் தறுவாயில் தேசத்தை நிலைகுலைத்த வகுப்பு வெறியின் விபரீதங்களால் ஏற்பட்ட மனோவேதனை தாங்காமல் பண்டித மதன் மோகன் மாளவியா, 'ராமா' 'ராமா' என்றும், 'காந்தி' 'நேரு' என்றும் உச்சரித்துக் கொண்டே உயிர் நீத்தார்.

ஆஹா! பாரத நாட்டின் சுதந்திரத்துக்காக எண்ணிக்கையற்ற தியாகங்கள் புரிந்து, தங்களுடைய தாபம் தணியாது, "என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?" என்று ஏங்கி அகால மரணமடைந்தவர்கள் எத்தனை பேர்!

1857-ம் வருஷம் ஆரம்பமான முதலாவது சுதந்திர யுத்தத்தில் தியாகி மங்கள பாண்டேயை பிரிட்டிஷாரின் தூக்கு மரம் முதலாவது பலியாகக் கொண்டது. அன்று முதல் நேற்று வரையில் தேசத்துக்காகத் தூக்கு மேடை ஏறிய வீர இளைஞர்கள் எத்தனை பேர்!

பிரிட்டிஷாருடன் நேருக்கு நேராக நின்று யுத்தம் செய்து போர்க்களத்தில் வீழ்ந்து வீர ஸ்வர்க்கம் அடைந்தவர்கள் எத்தனை பேர்?

பிரிட்டிஷாரின் துரோக வலையில் அகப்பட்டு மடிந்தவர்கள் எத்தனை பேர்!

தேச விடுதலைக்காகச் சிறையில் மாண்டவர்கள் எத்தனை பேர்; அதிகார வர்க்கத்தினால் பலி கொண்டவர்கள் எத்தனை பேர்; தாய் நாட்டின் மீது அன்பு கொண்ட காரணத்துக்காகத் தாய்நாட்டிலிருந்து விரட்டப்பட்டு அன்னிய நாடுகளில் அஞ்ஞாத வாசம் புரிந்து பரகதியடைந்தவர்கள் எத்தனை பேர்; சொத்தையும் வருமானத்தையும் இழந்து ஆண்டியானவர்கள் எத்தனை பேர்; உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த தியாகிகள் எத்தனை பேர்?

இத்தகைய அரிய தியாகிகளின் தொகை எண்ணில் அடங்காது; அவர்களின் பெருமை வர்ணிக்க இயலாது.

அவர்களில் ஒரு சிலருக்கு மட்டிலும் சரித்திரத்தின் பொற்பீடத்தில் இடம் கிடைத்திருக்கிறது. பாக்கியுள்ள லக்ஷோப லக்ஷம் பேர்களுக்கும் முப்பது கோடி ஜனங்களின் ஹிருதய பீடத்தில் இடம் கிடைத்திருக்கிறது.

அத்தகைய பெருமை வாய்ந்தவர்களில் சிசுக்கள், பெண்கள், இளைஞர்கள், வயோதிகர்கள் எல்லோரும் உண்டு.

* * *

பண்டித மோதிலால் நேரு, தாம் இறப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன் காந்திஜியிடம் சொன்னார்:

"மகாத்மாஜி, நான் சீக்கிரம் போய் விடுவேன். இந்தியா சுயராஜ்யம் பெறுவதை நான் இருந்து பார்க்கப் போவதில்லை. ஆனால், சுயராஜ்யம் பெறுவதில் நீங்கள் வெற்றி பெற்று விட்டீர்கள். கூடிய சீக்கிரம் நீங்கள் அதை அடைந்து அனுபவிக்கவும் போகிறீர்கள்."

நேருஜியின் தந்தை மரணப் படுக்கையிலிருந்து கூறிய மேற்படி வார்த்தைகள் அப்படியே உண்மையாகியிருக்கின்றன!

இந்தியா சுதந்திரம் பெற்ற வைபவத்தை நேரில் காணும் பாக்கியம், பாரத அன்னையின் அருந்தவப் புதல்வரும், இந்திய மகாஜனங்களின் தலை

வர்களுக் கெல்லாம் தலைவருமான மகாத்மா காந்திக்குக் கிடைத்திருக்கிறது.

சுதந்திரம் பெற்ற பின்னரும் தொடர்ந்து காந்திஜியின் தொண்டுக்குப் பாத்திரமாகும் பாக்கியம் பாரத நாட்டு மக்களாகிய நமக்குக் கிடைத்திருக்கிறது.

தர்ம நியாயத்துக்கு முரணின்றி, ஒரு சமூகத்துக்கோ அல்லது தேசத்துக்கோ தொண்டு செய்த தலைவரின் ஜெயந்தி வைபவத்துக்கு எப்போதுமே ஒரு தனி மதிப்பு உண்டு.

அப்படி யிருக்க, சர்வ மதத்தினராலும் சர்வ தேசத்தினராலும் மகான் என்று ஒப்புக் கொள்ளப்பட்ட காந்திஜியின் ஜெயந்தி வைபவம் வருஷா வருஷம் அகில உலகிலும் கொண்டாடப் படுவதில் ஆச்சரியம் என்ன?

* * *

மகாத்மா காந்தி மானிட வர்க்கத்துக்குச் செய்துள்ள தொண்டு மத பக்தி, மாகாண பக்தி, தேச பக்தி எல்லாவற்றையும் கடந்தது. அவரது வாழ்க்கைத் தத்துவங்கள் சர்வ மத சம்மதமானவை.

பலாத்காரம், மன்னுசை, சதி, சூழ்ச்சி முதலியன அரசியலின் முக்கிய அங்கங்கள் என்ற விபரீதத்தில் உலக நாடுகள் உழன்று கொண்டிருக்கையில், அன்பும் அஹிம்சையுமே அரசியலின் இரு கண்களென்றும், சத்தியம் தான் அதன் உயிரென்றும் ஸ்தாபித்த தனிச் சிறப்பு காந்திஜிக்கே உரியதாகும்.

நவீன யுத்தத்தில் இராணுவ இரகசியம் என்பது மற்றெந்தப் போர்த்தளவாடங்களையும் காட்டிலும் அதிகப் பிரயோஜனகரமானது, மிகுந்த சக்தியும் வாய்ந்தது. போர்த் திட்டங்கள் இரகசியமாக இருந்து விட்டால், பாதி வெற்றி கிடைத்து விட்டாற் போலத்தான்!

ஆனால், மகாத்மா காந்தியின் சாத்விகப் போரிலோ இரகசியம் என்ற ஆயுதத்துக்கு லவலேசமும் இடமில்லை. ஏன், இரகசியம் என்பது சத்தியப் போரின் ஜன்ம சத்துரு என்றும் சொல்லலாம்.

ஏனெனில், காந்திஜி தாம் சாத்விகப் போரை ஆரம்பித்த ஒவ்வொரு சமயத்திலும், தாம் போரை ஆரம்பிக்கப் போகும் தேதியைப் பல நாட்களுக்கு முன்பே அரசாங்கத்துக்கு உலகமறிய அறிவித்து வந்திருக்கிறாரல்லவா?

நவீன யுத்தம் எண்ணிக்கையற்ற வீரர்களான இளங்காளைகளைப் போர்க்களத்தில் பலி கொண்டிருக்கிறது.

ஆனால், காந்திஜியின் சாத்விகப் போரோ, எண்ணிக்கையற்ற வீர இளைஞர்களைத் தூக்கு மேடையிலிருந்தும், யமனின் வாயிலிருந்தும் காப்பாற்றியிருக்கிறது!

அடாடா! மக்களை அழிக்கும் அந்த யுத்தத்துக்கும் மக்களை உய்விக்கும் இந்த யுத்தத்துக்கும் எவ்வளவு வித்தியாசம், பாருங்கள்!!

* * *

அப்பேர்ப்பட்ட மகிமை வாய்ந்த மகாத்மா காந்தியின் 79-வது ஜெயந்தியை யொட்டி சென்ற வியாழக்கிழமை முதல் பாரத நாடெங்கும் ஒரு வாரக் கொண்டாட்டம் ஆரம்பமாகியிருக்கிறது.

மேற்படி ஜெயந்தி வைபவமானது வகுப்பு வெறியால் நிகழ்ந்துள்ள சோக சம்பவங்களை, மக்கள் தற்காலிகமாகவாவது மறக்கும்படி செய்திருக்கின்றது.

பாரத நாடு சுதந்திரம் பெற்ற தினமான ஆகஸ்டு 15-ந் தேதியிலும், சுதந்திரம் பெறுவதற்குக் காரண புருஷரான தவச் சிரேஷ்டர் காந்திஜி அவதரித்த அக்டோபர் மாதம் 2-ந் தேதியிலும் இந்திய மகாஜனங்கள் ஆனந்த பரவசம் அடையாதிருக்க முடியுமா?

இந்தியாவில் இனி அவ்விரண்டு நாட்களும்தான் மகத்தான உற்சவ தினங்களாகக் கொண்டாடப் படப் போகின்றன.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின் மகாஜனங்கள் கொண்டாடும் முதலாவது காந்தி ஜெயந்தி வைபவம் இதுவேயாதலால், சகிக்க முடியாத சோக சம்பவங்களுக் கிடையேயும் இது உற்சாகத்துடன் கொண்டாடப் படுகின்றது. ஆனால், பல தொல்லைகளும் தீர்ந்த பின் எதிர்காலத்தில் இந்த விழா இன்னும் பன்மடங்கு அதிக உற்சாகத்துடன் கொண்டாடப்படும் என்பதில் சந்தேகமில்லை.

* * *

அகில உலகிலும் சரி இணையற்ற இத்தகைய மாபெருந் தலைவரின் சீரிய தொண்டின் பலனை அனுபவிக்கும் மகத்தான பாக்கியம் பெற்றுள்ள நாம், அந்த மகானுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்?

காந்திஜி நம்மிடமிருந்து எவ்வித கைம்மாறையும் எதிர்பார்க்கவில்லை; அகில உலகமும் போற்றும் அந்த மகானுக்கு நம்மால் எவ்வித கைம்மாறும் செய்ய முடியப் போவதில்லை.

ஆனால், அடிமைச் சேற்றில் ஆழ்ந்து அல்லல் பட்ட ஜனங்களைக் கைதூக்கி விட்ட காந்திஜிக்குப் பாரத நாட்டு மக்கள் என்றென்றும், எத்தனை தலைமுறைகளானாலும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சோதனை அலைகளால் மோதுண்டு மூழ்கி விடாமல், அவற்றை வென்று நம்மை நாமே உயர்த்திக் கொள்வதே நாம் காந்திஜிக்குக் காட்டும் நன்றியாகும்.

அதாவது, இதுவரை அம் மகானின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி உன்னத நிலையை அடைந்துள்ள நாம், இனியும் அவரது கட்டளைகளைச் சிரமேற்கொண்டு சீரும் சிறப்பும் சுபிட்சமும் அடைந்து, பெற்ற சுதந்திரத்தை வெற்றிகரமாகப் பாதுகாக்கும் மகோன்னத நிலையை அடைய வேண்டும்.

• • •

பாக்கியவசத்தால் காந்திஜியையும் அவரது அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரர்களான பண்டித ஜவாஹர்லால் நேரு, ராஜாஜி, சர்தார் பட்டேல், மௌலானா அபுல்கலாம் ஆஸாத், பாபு ராஜேந்திரப் பிரசாத், ஸ்ரீமதி சரோஜினி தேவி முதலிய ஒரு சில அரும்பெரும் தலைவர்களையும் அடைந்துள்ள நாம், அவர்களுடைய காலத்தில் உன்னத நிலையை அடையாவிடில், பின்னர் கதிமோட்சம் அடைவது, அதாவது பெற்ற சுதந்திரத்தின் பூரண பலனை அனுபவிப்பது எக்காலத்திலோ, அறியோம்.

மகாத்மா காந்தி சமீபத்தில் கூறிய பொன் மொழிகளை இச் சந்தர்ப்பத்தில் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டியது கடமையாகும்.

"இப்போது இந்தியாவாகிற கப்பல் கொந்தளிக்கும் கடலில் சென்று வருகிறது.

"இந்த நெருக்கடியான சமயத்தில் இந்தியாவின் நிர்வாகத்தை நடத்தி வரும் தலைவர்களைக் காட்டிலும் சிறந்தவர்கள் நமக்குக் கிடைக்கப் போவதில்லையென்பது நிச்சயம்.

"ஆனால், சிலர் அத்தகைய தலைவர்கள் மீதும் அதிருப்தி கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு அதிருப்தி கொண்டுள்ளவர்கள் இப்போதுள்ள தலைவர்களை விடச் சிறந்த தலைவர்களைக் கொண்டு வரட்டுமே. அத்தகையோரிடம் நிர்வாக அதிகாரத்தை ஒப்புவிக்கும்படி நான் பழைய தலைவர்களிடம் கூறி விடுகிறேன்.

"சர்தாருக்கு வயதாகி விட்டது. நேருஜியையோ நிர்வாக பளுவானது வயோதிகராகத் தோன்றும்படி செய்திருக்கிறது.

"தேசத்தில் ஏற்பட்டுள்ள மகத்தான கொந்தளிப்பானது சர்தார் பட்டேலின் முகத்தில் வழக்கமாகத் தாண்டவமாடும் புன்முறுவலைக் கூட பறி கொண்டு விட்டது. நேருஜி கவலையின் உருவாக இருந்து வருகிறார்.

"அவர்கள் ஜனங்களுக்குத் தொண்டு செய்வதிலேயே தங்களுடைய முழு சக்தியையும் உபயோகித்து வருகிறார்கள்."

தலைவர்களைப் பற்றி மகாத்மா காந்தி மேற் கூறிய விதம் மனம் உருகியிருக்கிறார்.

தேசத் திருப்பணிக்காகத் தமது உடல், பொருள் எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்துள்ள ஜவாஹர்லால்ஜி கூட, 'என்னுடன் ஜனங்கள் ஒத்துழைக்காவிடில், பிரதம மந்திரி பதவியை ராஜிநாமா செய்வதைத் தவிர வேறு வழி எதுவுமில்லை' என்று மனம் இடிந்து கூறியிருப்பதைச் சகலரும் கவனிக்கவேண்டியது அவசியமாகும்.

அன்று தலைவர்களின் கட்டளைக்கிணங்க சிறிதும் தயங்காது அக்னிப் பிரவேசம் செய்த ஜனங்களுக்கு, இன்று அதே தலைவர்களின் கட்டளைக்கிணங்க அமைதியாக இருப்பதுதானா ஒரு பிரமாதமான காரியம்?

சுதந்திர இந்திய அரசாங்கத்தின் கட்டளைகளை நிறைவேற்றுவதுதான், நேருஜி முதலிய உயர்தர தலைவர்களின் கட்டளைகளை நிறைவேற்றுவதாகும். அவர்களுடைய கட்டளைகளை நிறைவேற்றுவதுதான், காந்திஜியின் கட்டளைகளை நிறைவேற்றுவதாகும். காந்திஜியின் கட்டளைகளை நிறைவேற்றுவதுதான், அந்த மகானின் ஜெயந்தி வைபவத்தை அந்தரங்க சுத்தியுடனும் விமரிசையாகவும் கொண்டாடுவதாகும்.

கம்பர் தரும் காட்சி

189. பரமபதமே போலும் இந்த உருவம்!

டி.கே.சி.

ராமனிடம் அவன் வரலாறு இன்னது என்று தெரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டான் அனுமன். ராமன் ஒன்றும் சொல்லவில்லை.

லக்ஷ்மணன் பேசினான்: சிற்றன்னையின் கட்டளைக் கிணங்கி, தம்பி பரதனுக்கு ராஜ்யத்தைக்கொடுத்துவிட்டுக் காட்டுக்கு வந்ததையும், அங்கே சீதையை இழக்க நேர்ந்ததையும் எடுத்துச் சொன்னான். அப்படியே அனுமன் ராமன் காலில் விழுந்து விட்டான். தன் காலில் அனுமன் விழுந்தது பெரிய அபசாரம் என்று எண்ணுகிறான் ராமன்.

"வேதங்களுக் கெல்லாம் உறைவிடமாகவுள்ள நீ, என் காலில் விழுவது தருமமா?" என்றெல்லாம் கூறுகிறான்.

தாழ்தலும், 'தகாதசெய் த(து)
என்னை நீ! தருமம்அன் றால்:
கேள்விநூல் மறைவலா ளா'
என்றனன்; என்னக்கேட் ட
பாழியந் தடந்தோள்வீ ரன்
மாருதி, 'பதுமச்செங் கண்
ஆழியாய் அடியேன்நா னும்
அரிக்குலத் தொருவன்' என் றான்.

[தாழ்தலும்: அனுமன் ராமனது காலடியில் விழவும்; தகாத செய்தது என்னை நீ: தகாத இந்தச் செயலை எப்படி நீ செய்யலாம்; தருமம் அன்றால்: இது தருமமா? கேள்வி நூல் மறைவலாளா: உயர்ந்த நூல்களைக் கேட்டுக் கேட்டு வேதங்களையும் கரைகண்ட பெரியோய்; பாழியந் தடந்தோள் வீரன் மாருதி: விசாலமாய்த் திரண்ட தோள் வீரனான அனுமன்; பதுமச் செங்கண் ஆழியாய்: செந்தாமரைக் கண்ணனான திருமாலை ஒத்தவனே; அரிக்குலத்து ஒருவன்: குரங்கின் இனத்தைச் சேர்ந்தவன்தானே நான்.]

• • •

அனுமன் தன்னைக் குரங்கென்று பணிவாகச் சொல்லிக் கொள்ளுகிறான். பார்த்தாலும் சாமானிய மனுஷ உருவமாகத்தான் இருக்கிறது. எப்படியோ அனுமனது மனோ சக்தியும் தேக சக்தியும் அபாரமாய் இருக்கின்றன—என்று ராம லக்ஷ்மணர்கள் கருதுகிறார்கள். அவைகளை யெல்லாம் தங்களுக்குத் தெரிவிக்கும்படி விரும்பிக் கேட்கிறார்கள். அவர்களுடைய வார்த்தைக்கு இணங்க அனுமனும் தன்னுடைய சாதனங்களால் வளர்ந்தேறிய சக்தி வாய்ந்த தோற்றத்தைக் காட்டுகிறான்.

ராம லக்ஷ்மணர்களுக்கு ஒரே வியப்பாய்ப் போய்விடுகிறது.

மின்னுருக் கொண்டவில் லோர்
வியப்புற; வேதநன் னூல்
பின்னுருக் கொண்டதென் னப்,
பெருமைஎப் பொருளும்தா ழப்,
பொன்னுருக் கொண்டமே ரு
புயத்திற்கும் உவமைபோ தாத்,
தன்னுருக் கொண்டுநின் றான்
தருமத்தின் தனிமைதீர்ப் பான்.

[மின்னுருக் கொண்ட வில்லோர் வியப்புற: மின்னல்போல வில்லைத் தோளில் வைத்த ராம லக்ஷ்மணர் அதிசயிக்கும்படி; வேத நன்னூல் பின்னுருக் கொண்டது என்ன: வேதத்தில் சொல்லிய அரிய உண்மைகளுக்கு ஒரு உருவம் அமைந்தது போல; பெருமை எப்பொருளும் தாழ: பெருமைக்கு எடுத்துக் காட்டான கடல், மலை, வானம் போன்றவைகள் எல்லாம் அனுமனுடைய உருவத்துக்கு ஒப்பிட்டால் சாமானியம் என்று தோன்றும்படியாக; பொன்னுருக் கொண்ட மேரு புயத்திற்கும் உவமை போதா: பொன் மயமான மேரு பர்வதமும், புயத்தின் அளவு இல்லை என்று சொல்லும்படி யானுல் முழு உருவத்தை எப்படி மேரு ஒக்கும்; தன் உரு கொண்டு நின்றான்: ஆத்ம சக்தி பூரணமாய் நிறைந்துள்ள தனது பேர் உருவத்தைக் கொண்டு நின்றான்; தருமத்தின் தனிமை தீர்ப்பான்: பூர்வத்தில் தருமதேவதை ஒன்று என்றே இருந்தது; அனுமன் பிறந்த பிறகு தரும தேவதைகள் இரண்டு என்றுசொல்லும்படி ஆய்விட்டது.]

அனுமன் சில வார்த்தைகள் பேசவும் அது காரணமாக அவனது கல்வி, பண்பாடு இவைகளின் பெருமையைக் கண்டு ராமன் அபாரமாக வியந்தான் என்பது நமக்குத் தெரியும். இப்போது

ராமனுடைய வியப்பைச் சொல்லவா வேண்டும்? அனைவையெல்லாம் கடந்துவிட்டது அந்த வியப்பு!

முக்தி நிலை என்பது, இறுதியில்லாத எங்கும் நிறைந்ததாயுள்ள பரம்பொருளின் சொரூபத்தோடு ஒன்றி விரிந்து நிற்கும் நிலை. அந்த நிலையில் கீழான ஜட தத்துவங்கள் எல்லாம் தாமாக ஒழிந்து நின்றுவிடும். வேதங்களாலும் தத்துவ ஞானத்தாலும் வரையறுத்துக் கொள்ள முடியாதது அது: இந்த விஷயம்தான் ஞாபகத்துக்கு வருகிறது ராமனுக்கு.

'தாள்ப்படாக் கமலம்அன் ன
  தடங்கணான் தம்பிக்(கு)அம் மா!
கீழ்ப்படா நின்றநீக் கி,
  கிளர்படா தாகி,என் றும்
நாட்படா மறைகளா லும்
  நவைபடா ஞானத்தா லும்
கோட்படாப் பதமே,ஐ ய!
  குரக்குருக் கொண்ட(து)' என்றான்.

[தாள்ப்படாக் கமலம் அன்ன தடங்கணான் தம்பிக்கு: மூடுதல் என்பது இல்லாத செந்தாமரை போன்ற கண்ணனான ராமன், தம்பியைப் பார்த்து: கீழ்ப்படா நின்ற நீக்கி: கீழான ஜட உணர்ச்சிகளை யெல்லாம் ஒழித்து: கிளர்படாதாகி: இதற்கு மேல் விரிதலுக்கு இடமில்லை என்னும்படி பூரணமாய்; என்றும் நாள்ப்படா மறைகளாலும்: நாள்ப்பட்டது. பழையது என்று சொல்ல முடியாது. புதிய விஷயங்களை எக்காலத்திலும் வெளியிட்டுக் கொண்டிருக்கும் மறைகளாலும்; நவைபடா ஞானத்தாலும்: ஆணவ மயக்கம் இறிதுமில்லாத ஞானத்தாலும்; (நவை: குற்றம்) கோள்ப்படா பதமே: வரையறுக்கப்படாத நிலையே; கோள்ப்படுதல்: அடங்கி யிருத்தல்; ஐய: லக்ஷ்மணா; குரக்குரு கொண்டது: குரங்கின் உருவை ஏதோ எடுத்துக் கொண்டது. கடவுள்த் தத்துவத்தோடு ஒன்றிய ஞானியே அனுமன் என்பது விஷயம்.

குறிப்பு:—அதிசய பாவத்தின்] [தொனி செய்யுளில் நிறைந்து ஒலிக்கிறது. 'ஐய' என்று சொன்ன பிறகு, வார்த்தை நிற்கிறது. அது காரணமாக அதிசயத்துக்கு வேகம் உண்டாகிறது.]

இதிகாசத்தில் அனுமன் எவ்வளவு உயர்ந்த பாத்திரமாக விளங்கப்போகிறான் என்பதைக் கவி எடுத்துக் காட்டுகிறது. கவிஞரின் உள்ளத்தில் உண்டாகும் அதிசயம் அப்படியெல்லாம் பெருகிப் பாய வேண்டியிருக்கிறது.

முக்கிய அறிவிப்பு


(Eyetex) "ஐடெக்ஸ்" என்ற பெயரால் பண்டைய கால சாஸ்திரிய முறைப்படி முதன் முதல் கண் மை பெண்மணிகளின் அழகிற்கென்றே தயாரித்து விற்பனைக்கு வெகு காலமாக அனுப்பிவரும் அரவிந்த் லாபரட்ரீஸார் இதன்மூலம் பொது மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் அறிவிப்பது என்னவென்றால்:—

மிகவும் குணமுள்ளதும், பொது மக்களின் ஆதரவையும் விருப்பத்தையும் பெற்றுள்ள "ஐடெக்ஸ்" என்ற கண் மைப் பெட்டிகளைப் போன்று இன்னும் இதரர்களால் அநேகமாக பெட்டிகளின் அளவு, பெயர், பார்வை, எழுத்துக்களின் கோர்வை முதலியவை எங்களது "ஐடெக்ஸ்" தானோ என்று எளிதில் ஏமாறும்படியாக புதுப்புதுப் பெயர்களிலும், விதங்களிலும் கண்மை வந்து கொண்டிருக்கின்றன.

எங்களது "ஐடெக்ஸ்" கண்மையின் குணம் கண்டு ஆதரவு அளித்து வரும் பொதுமக்கள் போலிகளைக் கண்டு எளிதில் ஏமார்ந்துவிடக் கூடுமென்று வாங்கும்போது அடியில் கண்ட பெட்டியின் மார்க்கை நன்றாகப் பார்த்து வாங்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளுகிறோம்.

(Eyetex) "ஐடெக்ஸ்" கண் மையை சிறு குழந்தைகள் முதல் உபயோகிக்கலாமென்று, பரீக்ஷித்தறிந்த பல டாக்டர்கள் அத்தாக்ஷி செய்திருக்கிறார்கள்.

எல்லா ஷாப்புகளிலும் 12 அணா விலைக்குக் கிடைக்கும்



இது அரவிந்த் லாபரட்ரீஸாரின் அறிக்கை

விநியோகிப்பவர்கள்:

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

திருவல்லிக்கேணி — மதராஸ்-5

பாரதி மண்டபத் திருவிழா

ஹர் எக்ஸலென்ஸி ஸ்ரீமதி சரோஜினி தேவி அவர்களுக்கு நமது மனமார்ந்த வந்தனம்.

தமிழ் நாட்டுத் தேசிய மகா கவியின் ஞாபகார்த்த மண்டபத்தைத் திறக்கத் தேவியார் மனமுவந்து ஒப்புக்கொண்டார்கள். வருவதற்கு ஆவலாயு மிருந்தார்கள். பிரயாணத் திட்டமும் போட்டிருந்தார்கள். இந்த விஜயத்தையொட்டித் தமிழ் நாட்டில் இன்னும் பல அலுவல்களையும் ஒப்புக்கொண்டிருந்தார்கள். எனினும், ஆயிரம் பதினாயிரம் லட்சம் என்று அகதிகளும் அனாதைகளும், கணவனை இழந்த மனைவியரும், மனைவி மக்களைப் பறிகொடுத்த ஆடவரும், பெற்றோரை இழந்த சின்னஞ் சிறு குழந்தைகளும் தாம் கவர்னர் பதவி வகிக்கும் மாகாணத்துக்குள் வந்து கொண்டிருக்கும் சமயத்தில், உண்ண உணவின்றியும் உடுக்க உடையின்றியும் அவர்கள் தவித்துக் கொண்டிருக்கும் சமயத்தில், ஆயிரம் மைல் கடந்து அவர் எப்படி வர முடியும்? தமது பொறுப்பில் உள்ள பிரதேசத்தை விட்டு எப்படிப் பத்து நாளைக்குமேல் வெளியில் இருக்க முடியும்?

முடியவே முடியாதுதான்! ஒருவேளை அவர் பிடிவாதமாக வந்திருந்தால், "சரிதான்; பெண்களுக்குப் பதவி கொடுத்தால் இப்படித்தான் செய்வார்கள்!" என்று உலகம் தூற்றினாலும் தூற்றும்! அந்தப் பழியெல்லாம் பாரதியாரின் தலையிலே விழும்.

எனவே, ஸ்ரீமதி சரோஜினி செய்த சரியான தீர்மானத்துக்காக அவரைப் பாராட்டுகிறேன். அதையும் சரியான சமயத்தில் செய்ததற்காக இரட்டிப்பு வந்தனம் செலுத்துகிறேன்.

எல்லா ஏற்பாடுகளும் நடந்த பிறகு, அழைப்புக்கள் அச்சிட்டு அனுப்பிய பிறகு, விழாவுக்கு இரண்டு நாளைக்கு முன்பு வரவில்லையென்று தெரிவித்தால், எவ்வளவு தொந்தரவாய்ப் போயிருக்கும்?

இரண்டு வாரத்துக்கு முன்னாலேயே முடிவு செய்து சொன்னார்களே, அதற்காக மிகவும் வந்தனம்.

திறப்பு விழாவை முன்னிட்டுக் குறிப்புக் கல்லில், "இன்னார் தலைமையின் கீழ் இன்னார் திறந்து வைத்தார்" என்று எழுதச் செய்து, அதைச் சுவரில் பதிப்பது வழக்கம். எது எப்படியிருக்குமோ என்று அவ்விதம் குறிப்புக் கல்லில் எழுத்துப் பதிக்க இம்முறை ஏற்பாடு செய்யவில்லை! ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. திறப்பு விழா நடந்த பிறகு கல்லில் பதித்துக் கொண்டால் போகிறது.

* * *

மற்றப்படி குறிப்பிட்டதேதியில் திறப்பு விழா சிறப்பாக நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மண்டபத்துக்கு அஸ்திவாரம் இட்ட ராஜாஜியே திறப்பு விழாவையும் நடத்தி விடுவார்கள்.

அவர்கள் திட்டம் போட்டுக் கொடுத்தபடி மண்டபம் கட்டப்பட்டிருக்கிறதா என்று அத்தாட்சியும் கொடுப்பார்கள்.

* * *

தமிழ் நாட்டுப் பத்திரிகாசிரியர்கள், நூலாசிரியர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகை நிருபர்கள் எல்லாரையும் வேண்டிக் கொள்கிறேன். எட்டயபுரம் பாரதி மண்டபத் திறப்பு விழாவுக்கு அனைவரும் விஜயம் செய்ய வேண்டும். அஸ்திவார விழாவில் ஒத்துழைத்ததுபோல, அதைக் காட்டிலும் அதிகமாகவே, இந்த பாரதி மண்டபத் திறப்புவிழாவில் ஆசிரியர் – எழுத்தாளர் குழுவினர் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும், எழுத்தாளரும், நிருபரும் தங்களுக்குத் தனி உரிமை உள்ள திருவிழா என்று கருதி இரண்டு நாள் முன்னதாகவே வந்திருந்து நடத்தி வைக்க வேண்டும்.

இந்தியா தேசத்திலேயே ஒரு கவிக்கு ஞாபகச் சின்னம் எழுப்பும் திருவிழா எட்டயபுரத்திலேதான் முதன் முதலில் நடக்கிறது என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

எல்லாருக்கும் அழைப்பு அனுப்பப்படுகிறது. விலாசத் தவறுதல் முதலிய காரணங்களினால் அழைப்பு ஒருவேளை வந்து சேராமற் போனாலும் பொருட்படுத்தாமல்,

இதையே அழைப்பாகப் பாவித்து விஜயம் செய்யக் கோருகிறேன்.

உண்மையில், எழுத்தாளர் கூட்டம் இந்த விழாவுக்கு அழைப்பு என் எதிர் பார்க்கவேண்டும்? நம்முடைய வீட்டுக் கலியாணத்துக்கு நாமே அழைப்பு அனுப்பிக் கொள்வது உண்டா?

ஆசிரியர் - எழுத்தாளர் - நிருபர்களுக்கு ஜாகை, உணவு முதலிய வசதிகள் இந்தக் கால நிலைமையில் எவ்வளவு முடியுமோ அவ்வளவும் செய்யப்பட்டிருக்கிறது. ஏதாவது குற்றம் குறைகள் இருந்தாலும் பொருட்படுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய வீட்டில் நடக்கும் விசேஷத்தில் நம்மை யாரும் உபசாரம் செய்யவில்லை யென்று கோபித்துக் கொள்வதுண்டா?

* * *

பொது மக்களுக்கு இன்னொரு செய்தி; ஆனால் அவ்வளவு உற்சாக மளிக்கும் செய்தி அல்ல. ஆசிரியர், எழுத்தாளர், வரவேற்புக் கமிட்டியால் அழைக்கப்பட்டவர்கள், ஆசிரியர்களுக்கும், வாசகசாலைகள், தமிழ்க் கழகங்கள் பாரதி சங்கங்கள் முதலிய இலக்கிய ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளுக்கும் மட்டுமே ஜாகையும் உணவும் அளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். உணவுப் பொருள் நிலைமையையும் சர்க்கார் சட்ட திட்டங்களையும் முன்னிட்டு, இதற்கு மேலே வரவேற்புக் கமிட்டியால் பொறுப்பு ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மேற்படியார்கள் இப்பொழுதே, — உடனேயே, — தாங்கள் வருகிற விவரம் வரவேற்புக் கமிட்டிக்குத் தெரிவித்துத் தபால் மூலம் உணவு டிக்கட் பெற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் உணவுக்குச் சொந்த ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

பாரதியின் மகிமையால் அடுத்த ஆண்டில் இத்தகைய கஷ்டங்கள் இல்லாமற் போகுமென்றும், இறைவன் அருளால் வந்தவர்கள் எல்லோருக்கும் உணவளித்தல் சாத்தியமாயிருக்கு மென்றும் நம்புகிறேன்.

பாரதி மண்டப நிதி

ரங்கூன் பாரதி மண்டப நிதிக் கமிட்டி காரியதரிசி ஸ்ரீ இ. ஷண்முகம் மூலம் வசூல் ரூ. 2005-8-0க்கு விவரம்:

திரு இ. ராம சொ. சொக்கலிங்கம்	125	0	0
நியூ பாரத் கபே காப்பி அண்டு சாப்பாடு ஹோட்டல்	101	0	0
தேவர் இ. சண்முகத் தேவர் சிற்றுண்டிச்சாலை	101	0	0
ஒரு அன்பர்	75	0	0
பாரத பந்து காப்பி ஹோட்டல் எம். பொன்னுச்சாமி	71	0	0
இ. வெள்ளைச்சாமித் தேவர்	51	0	0
வை. முத்துக்குமாரு நாடார்	51	0	0
"ரசிக ரஞ்சனி" பிரஸ்	51	0	0
நா. மு. மா. அண்டு அ. சின்னத் தம்பி நாடார்	51	0	0
"பால பர்மா" பிரஸ் அதிபர் டி. எஸ். சிவன்	51	0	0
சி. அம்பலம்	51	0	0
ஹோட்டல் தொழிலாளர் சங்கம்	35	0	0
இந்திய அரசாங்கப் பிரதிநிதி காரியாலய உத்தியோகஸ்தர்கள் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி மூலம்	28	0	0
தென் இந்திய அச்சுத் தொழிலாளர் சங்கம்	25	0	0
ஜெயலெட்சுமி விலாஸ் சாப்பாடு ஹோட்டல்	25	0	0
சென்ட்ரல் கபே. எஸ். சுந்தரம்	25	0	0
நியூ மெட்ராஸ் பிராமணாள் ஹோட்டல்	25	0	0
ஸ்ரீ வி. முத்து செட்டியார்	25	0	0
ஸ்ரீ எம். சாமி	25	0	0
ஸ்ரீ வி. ஆர். ராமன் செட்டியார்	25	0	0
சி. கரு. சி. அரை	21	0	0
சுந்தரம் அண்டு கம்பெனி	21	0	0
ஸ்ரீ முத்தய்யா பிள்ளை	21	4	0
ஜெ நவீந்த் கபே	21	0	0
சி. அரு. அரை	16	0	0
ஸ்ரீ ரா. சுந்தர்ராஜ்	15	0	0
ஸ்ரீ கா. சுந்தரம்	15	0	0
ஸ்ரீ ஆர். தங்கவேலு	15	0	0
ஸ்ரீ ந. வேலு	15	0	0
ஸ்ரீ கே. பி. நாராயணன்	15	0	0
ஸ்ரீ ஏ. எஸ். வி. அருணாசலம்	15	0	0
ஸ்ரீ எஸ். பி. எஸ். சுப்பிரமணியம்	11	0	0
தெருகேப் மாதவநாயர்	11	0	0
ஸ்ரீ ஏ. சின்னய்யா	11	0	0
பத்மா சிற்றுண்டிசாலை	11	0	0
ஜுவலியர் ஸ்ரீ எஸ். பொன்னுச் சாமிப் பிள்ளை	11	0	0
அரு காந்தி அண்ணாமலை	11	0	0
ஸ்ரீ எல். ஆர். நாயுடு	11	0	0
ராமநாதன் அண்டு கம்பெனி ராம. சொக்கலிங்கம்	11	0	0
ஸ்ரீ கோமளவிலாஸ், காப்பி ஹோட்டல் கோவிந்தன்	11	0	0
ஸ்ரீ பெருகுநாத்	11	0	0
ஸ்ரீ எம். ஏ. சாமி நத்தனின்	11	0	0
கிருஷ்ணப் பிரசாதிக காப்பி ஹோட்டல், எஸ். எஸ். ராய்	11	0	0
குஞ்சர விலாஸ், சாப்பாடு ஹோட்டல்	11	0	0
ஸ்ரீ எஸ் எஸ். சிவஞானத்தேவர்	11	0	0
சென்ட்ரல் கபே தொழிலாளர்கள்	11	0	0
ஸ்ரீ பி. ராமசாமித் தேவர்	11	0	0

ஸ்ரீ கௌரி சிங்	11	0	0
ஸ்ரீ சோலையப்ப நாடார்	11	0	0
தாபோர். கடலைக்கடை	11	0	0
த. பரதேசி ஆனந்த கபே	11	0	0
ஸ்ரீ வி. ஆர். எஸ். சின்னய்யா	11	0	0
ஸ்ரீ எஸ். டி. வேலு பிரதர்ஸ்	11	0	0
ஸ்ரீ நீ. சுந்தரராஜன்	11	0	0
ஸ்ரீ நித்யானந்த பவனம் கி. கிருஷ்ணம் பிள்ளை	11	0	0
ஸ்ரீ சி. செ. சண்முக நாடார்	11	0	0
ஸ்ரீ ரா. வயிரவ நாடார்	11	0	0
ஸ்ரீ ஆர். செல்லம் நாடார்	11	0	0
ஸ்ரீ வி. தேவராஜ், கமலா பிரஸ்	10	0	0
ஸ்ரீ கே. வாசுதேவகண்டப் பிள்ளை	10	0	0
ஸ்ரீ இ. ஏ. சாமி	10	0	0
ஸ்ரீ எஸ். ஆர். வி. கே. பிள்ளை	10	0	0
நீலமாளிகை	10	0	0
ஸ்ரீ பழ. வே. பழ. சோமசுந்தரம்	10	0	0
ஸ்ரீ வி. முரு. பெ. முருகப்பன்	10	0	0
ஸ்ரீ வி. தெ.	10	0	0
ஸ்ரீ சக்தி பிரஸ் தொழிலாளர்கள்	9	0	0
ஸ்ரீ க. ம. ராமசாமி	7	0	0
ஸ்ரீ க. ம. நல்லகண்ணு	7	0	0
ஸ்ரீ எஸ். வள்ளியப்பர்	5	0	0
மாரியம்மன் விலாஸ் காப்பி ஹோட்டல்	5	0	0
கமலா ஸ்டோர் கல்கி ஏஜென்டு	5	0	0
ஸ்ரீ ஏ. எம். வி. தேவர்	5	0	0
ஸ்ரீ என். முத்தய்யா	5	0	0
ஸ்ரீ பி. எம். சங்கரலிங்க ஆசாரி	5	0	0
ஸ்ரீ ஏ. கே. கணபதி	5	0	0
ஸ்ரீ எஸ். எம். சண்முகம்	5	0	0
ஸ்ரீ வி. ஆர். எம். வி ஆர். சோமசுந்தரம் செட்டியார், ஆமங்கை	5	0	0
ஸ்ரீ எம். ஏ. லிங்கம்	5	0	0
டாக்டர் என். ராஜன்	5	0	0
ஜெய் ஹிந்த் டெய்லர்	5	0	0
ஸ்ரீ பழ. சிவ. சிவராமன் செட்டியார்	5	0	0
ஸ்ரீ ஆர்.எம். முத்தய்யா சேர்வை	5	0	0
நேரு கபே	5	0	0
நவயுவ சிற்றுண்டிசாலை துரைசாமி	5	0	0
ஸ்ரீ பெர. சா. சாத்தய்யா	5	0	0
ஸ்ரீ கோ. க. வீரப்பன்	5	0	0
ஸ்ரீ ராம. வீர. ராமசாமி	5	0	0
ஸ்ரீ வசா. அரு. அளகப்பன்	5	0	0
ஸ்ரீ ஆமு. வீர. வீரப்பன்	5	0	0
ரோஸ்டான் அண்டு கம்பெனி	5	0	0
ஸ்ரீ பழ. ப. திருநாவுக்கரசு	5	0	0
புவனகிரி செட்டி அண்டு கம்பெனி	5	0	0
ஸ்ரீ கே. எஸ். டி. நாயுடு	5	0	0
வேதம் அண்டு கம்பெனி	5	0	0
ஸ்ரீ சித. சா. தேவராஜன் செட்டியார், சைப்பி	5	0	0
ஸ்ரீ மா. முத்தய்யா	5	0	0
ரெத்தினம் அண்டு கம்பெனி	5	0	0
ஸ்ரீ சித. கணபதி	5	0	0
ஸ்ரீ பழ. சண்முகம்	5	0	0
ஸ்ரீ பெரி அழகப்பா	5	0	0
ஸ்ரீ உ. நாகய்யா	5	0	0
ஸ்ரீ சி. மு. சே. சின்னமுத்து	5	0	0
ஸ்ரீ க. சி. லெட்சுமணஞ் செட்டியார்	5	0	0
ஸ்ரீ ஆ. சின்னய்யா	5	0	0
ஸ்ரீ அ. ச. சண்முகஞ் செட்டியார்	5	0	0
ஸ்ரீ குப. பாண்டியன்	5	0	0
ஸ்ரீ மு. ராமசாமி	5	0	0
ஸ்ரீ சித. பெரி	5	0	0
ஸ்ரீ சொமு. அரு. அரு.	5	0	0
ஸ்ரீ சொமு. கமெ. ராம	5	0	0
ஸ்ரீ வி. மாரியப்ப செட்டியார்	5	0	0
ஸ்ரீ பெரி. ஞானபண்டிதன்	5	0	0
ஸ்ரீ வி. ஆர். கண்ணப்பன்	5	0	0
ஸ்ரீ ஏ. ஷண்முக நாடார்	5	0	0
ஸ்ரீ கே. கண்ணப்பர்	5	0	0
ஸ்ரீ எஸ். பி. காசி விஸ்வநாதன் தாக்கிரா	5	0	0
ஸ்ரீ மு. கணபதி	5	0	0
ஸ்ரீ கு. ஆறுமுகம்	5	0	0
ஸ்ரீ மு. அளகப்பன்	5	0	0
ஸ்ரீ சி. ஆர். எஸ். மணி	5	0	0
ஸ்ரீ கே. கோவிந்த மேனன்	5	0	0
ஸ்ரீ ஏ. எல். தேனப்பன்	5	0	0
ஸ்ரீ மு. வேலுத்தேவர்	5	0	0
ஸ்ரீ உ. ராம. க. ராமசாமி	5	0	0
ஸ்ரீ லெ. காசி	5	0	0
ஸ்ரீ மே. வா. சிங்	5	0	0
ஸ்ரீ ரங்கசாமி	5	0	0
ஐந்து ரூபாய்க்குக் குறைந்த வசூல்	103	4	0
ஆக ரூ.	2005	8	0
ஏற்கெனவே வசூல் ரூ.	26,272	12	0
ஆக மொத்தம் ரூ.	28,278	4	0

★

கல்கி

வாரப் பதிப்பு

இந்தியா & சிலோன்

வருஷச் சந்தா	...	ரூ.	13—0—0
ஆறு மாதச் சந்தா	...	ரூ.	6—8—0
தனிப் பிரதி	...	அணா	0—4—0

வெளி நாடு

வருஷச் சந்தா	...	ரூ.	16—4—0
ஆறு மாதச் சந்தா	...	ரூ.	8—2—0
தனிப் பிரதி	...	அணா	0—5—0

★

மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை




சிக்கல் மயமான உலகில் உண்மை வாய்ந்தவை எளிதான விஷயங்களே
ஒரு சிறு வில்லை உங்களுக்கு ஆரோக்கியம் அளிக்கமுடியும்
அது இயற்கைக்கு மாறாக அன்றி அத லுடன் ஒத்துவேலை செய்கிறது
ஆஸ்ப்ரோவால் இருதயத்துக்கு ஒரு கெடுதியுமில்லை
'ஆஸ்ப்ரோ'
வலியையும் ஜுரத்தையும் போக்கடிக்கிறது
ஆடவர், ஸ்திரீகள், குழந்தைகள், அனைவருக்கும் ஆஸ்ப்ரோ செய்யக்கூடியதென்ன
ASPRO
ஜே. எல். மார்ஸன், ஸன் & ஜோன்ஸ்
எங்கும் கிடைக்கும்

‘குமார விஜயம்’



மதுரை தேவி பால விநோத சங்கீத சபையார் தற்போது மதுரையில் நடத்தி வரும் ‘‘குமார விஜயம்’’ என்னும் பிரபல நாடகத்தை, திருப்புகழ் மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ண ஸ்வாமி ஐயர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள்.



மேற்படி நாடகத்திலே, பாரத தேவியின் அடிமை விலங்கு முறிந்து, அவள் சுதந்திர தேவியாக மணி மகுடம் தரித்து விளங்கும் ஒரு அற்புதமான காட்சியும் காட்டப்படுகிறது.

தாயின் யோசனை க்ருஷன் சாப்பிடத்தான்!

கடுமையான முதுகு வலிக்கு

முதல் பாட்டிலிலேயே நிவாரணம்

அவனது தாயின் யோசனையின் பேரில் க்ருஷன் சால்ட்ஸ் சாப்பிட்டதால்தான் அவனது முதுகு வலி நீங்கியது. கணக்கற்ற வேறு மருந்துகளைச் சாப்பிட்ட போதிலும் அவனுக்கு வலி நீங்கவே இல்லை. ஆனால் ஒரு பாட்டில் க்ருஷன்ஸ் சாப்பிடு முன்பே அவனுக்கு குணம் தெரிந்தது. இந்தக் கடிதத்தில் எழுதுகிறான் :—

"சென்ற வருஷத்தில் இதே நாட்களில் மூன்று வாரங்களுக்கு முதுகில் கடுமையான வலியால் கஷ்டப்பட்டேன். படுக்கையை விட்டு எழவே இல்லை. அநேக பிரபலமான மருந்துகளை உபயோகித்துப் பார்த்தேன். ஏதாவது பலன் கிட்டினால்தானே ?

"பிறகு என் அவஸ்தையைக் குறித்து என் தாயாருக்குக் கடிதம் எழுதினேன். மறு தபாலிலேயே என் தாயார் என்னைக் க்ருஷன் சால்ட்ஸ் சாப்பிடுமாறு வற்புறுத்தி கடிதம் எழுதினாள். உடனே ஒரு பாட்டில் க்ருஷன் வாங்கினேன். உண்மையாக நான் ஐந்தாவது முறை சாப்பிட்ட போதே என்னால் உட்கார முடிந்து விட்டது. தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டே வந்ததில் இரண்டு வாரங்களுக்குள்ளேயே சொஸ்தமடைந்தேன். இந்த விசித்திரமான மருந்தை நான் சாப்பிடத் தவறியதே இல்லை. பிரதி தினமும் நான் சாப்பிடும் சிறிய அளவு க்ருஷன் என்னை திடகாத்திரமாக வைத்திருக்கிறது."

—(ஈரோடு) ஏ. ஜி.

மனித சரீரத்திற்கே மூத்திர கோசம் ஒரு வடிகால் போன்றதாகும். அது சரிவர வேலை செய்யாவிட்டால், சில கழிவு அமிலங்கள் வெளியேற்றப்படாமல் இரத்த ஓட்டத்தையே பாழாக்கி முதுகு வலி, மூடக்கு வாதம், பிருக்க ஆயாஸம் ஆகிய நோய்களின் அறிகுறியை உண்டாக்குகிறது. கழிவுப் பொருள்களை வெளியேற்ற மூத்திர கோசத்திற்கு அனுகூலம் செய்யக்கூடிய அருமருந்து க்ருஷன் சால்ட்ஸ்தான்.

எல்லா வியாபாரிகளும் கெமிஸ்டுகளும் க்ருஷன் பாட்டில் ஒன்றுக்கு ரூ. 1–10–0 விதம் விற்பனை செய்கின்றனர்.

BC-9


மிகவும் இன்பகரமான
மனோகரமான
மணத்துடன்
கூடியது..

ஸாவரின் தின் பண்டங்களுக்குத் தனிச் சிறப்புள்ள அம்சங்கள் மூன்று. (1) மதுரமான மணம், (2) போஷாக்கு அளிக்கும் தன்மை, (3) பூரணமான பரிசுத்தம். 'ஸாவரின் ஸ்வீட்ஸ்' என்ற பெயர் ஞாபகமிருக்கட்டும்.



ஸாவரின்
ஸ்வீட்ஸ்

K. C. P. தயாரிப்பு

KCK3TN.

பாணிக்கிரகணம்

கே. எஸ். எஸ். ராகவன்



பதினைந்தாம் அத்தியாயம்

அபிப்பிராய பேதம்

அன்று காவேரிப்பாக்கத்தில் நடந்த சண்டையில் கிருஷ்ணகுமாரியைத் தவிர, தனி சர்க்காரைச் சேர்ந்த சமார் நூறு பேருக்குக் காயம். இருபது பேர் உயிர் துறந்தார்கள். போலீஸ்காரர்களுக்கும் பலத்த சேதம். ஏன், அவர்களில் இறந்தவர்கள் நாற்பது பேருக்குமேலிருக்கும். பாதிப் பேர் தங்களைச் சார்ந்தவர்களின் துப்பாக்கிக் குண்டுக்கே இரையாயினர்.

கிருஷ்ணகுமாரிக்குப் படுகாயம் பட்டிருந்தாலும், சாரங்கனும் ராஜுவும் எப்படியோ அவளைச் செஞ்சேரிக்குக் கொண்டு வந்து விட்டார்கள். அவர்கள் எவ்வளவு சொன்ன போதிலும் கிருஷ்ணகுமாரி பேசுவதை நிறுத்தவில்லை.

"என்னை ஏமாற்றுகிறீர்கள்! நான் இருக்கப் போவது இன்னும் சில மணி நேரம் தான்! அதற்குள் நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறேன்...மேலும், பேசிக்கொண்டேயிருந்தால் வலி தெரியவில்லை."

அங்கு கூடியிருந்தவர்கள் எல்லோரும் கண்களைத் துடைத்துக் கொண்டார்கள்.

"சாரங்கன், ராஜு! நீங்கள் இருவரும் என் அருகே வாருங்கள். சாரங்கன், உங்களுக்குக் கல்யாணமாகிவிட்டது. இருந்தாலும் பிரம்மசாரியாக இருக்கிறீர்கள். ராஜுவோ பீஷ்மர் மாதிரி காலத்தைக் கழிக்க வேண்டுமென்று நினைக்கிறார் போலிருக்கிறது...நான் சொல்லுகிறேன், கேளுங்கள்! நீங்கள் இரண்டு பேருமே என்னைக் கல்யாணம் செய்து கொண்டு விடுங்கள்!......எனக்குத் தெரியும்......"

சாரங்கனுக்கும் ராஜுவுக்கும் ஒரே சமயத்தில் அந்த எண்ணம் தோன்றியது. கிருஷ்ணகுமாரி நினைவிழந்து ஏதோ பிதற்றுகிறாள் என்று சாரங்கன் கை ஜாடையாக அவளைப் பேசாமல் இருக்கச் சொன்னான்.

"என்ன சாரங்கன்! எனக்கு அது கூடவா தெரியாது? நான் பிதற்றவில்லை. உங்கள் இரண்டு பேருக்கும் நான் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன். நான் பார்த்துப் பழகின புருஷர்கள் எல்லோரும் என்னை ஏதோ அழகான பொம்மை என்றே மதித்தார்கள். நீங்கள்தான் என்னை ஒரு சம புத்தியுள்ள ஸிநேகிதி, நம்பிக்கைக்குப் பாத்திரமானவள், பெரிய விஷயங்களில் கலந்தாலோசிக்கக் கூடிய யோக்கியதை யுடையவள், தைரியசாலி,

பெண்ணா யிருந்தாலும் ஆண்களோடு சமமாக நின்று ஒரு மகத்தான இயக்கத்தில் கலந்துகொண்டு போர் புரிவதற்கு வேண்டிய திறமையும் பலமும் உள்ளவள் என்று நினைத்தீர்கள். என்னுடன் பேசும்போதும், பழகும்போதும் ஒரு தடவை யாவது அசந்தர்ப்பமான வார்த்தையை நீங்கள் சொன்னது கிடையாது. எனக்கு மறு ஜன்மம் உண்டானால் உங்களுடன் தான் நான் பிறக்க விரும்புவேன்...... அடாடா, நிஜமாக இப்போதுதான் நான் பிதற்றுகிறேன்......கல்யாணம் என்று சொல்ல வந்தேனே, நிஜமாக என்னை — என்னையே விழுங்கி யிருக்கும் அந்தப் பேராசையை — நீங்கள் பாணிக்கிரகணம் செய்துகொள்ள வேண்டும்......எப்படியும் அந்த பிரிட்டிஷ்காரனுக்குப் பணிந்து விடாதீர்கள்!... அவர்கள் நாட்டை விட்டு ஓடும் வரையில் நம் கொடியைத் தாழ்த்தாதீர்கள்......!”

* * *

கிருஷ்ணகுமாரி இறந்தவுடன் வானர சேனையின் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. அவர்கள் எல்லோரும் ஒரே மனதாக, தங்கள் அஜாக்கிரதையினால்தான் அவள் சுட்டுக் கொல்லப்பட்டாள் என்று நினைத்தார்கள். அதற்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ளவும் துடிதுடித்தார்கள்.

ராஜா சாரங்கனிடம் சொன்னான்: “சாரங்கா, இன்று இரவு நாம் அவர்களைத் தீர்த்துவிட வேண்டும். அப்போதுதான் கிருஷ்ணகுமாரியின் ஆத்மா சாந்தி யடையும். நான் எல்லாம் விசாரித்து விட்டேன். காவேரிப்பாக்கத்தில் பத்துப் பன்னிரண்டு குடிசைகள் போட்டுக்கொண்டு அந்த மிலிடரிக்காரர்கள் தங்கி யிருக்கிறார்களாம். அவர்களைத் தீர்த்துக் கட்ட நம் தற்கொலைப் படையை நான் தயார் செய்து விட்டேன். அவர்கள் “போ!” என்ற வார்த்தைக்குத் தான் இப்போது காத்திருக்கிறார்கள். நீ என்ன சொல்கிறாய்? இப்போதே அனுப்புவது தேவலையா, இராத்திரி பதினொரு மணிக்கு மேல் அனுப்புவது தேவலையா?”



சாரங்கன் உடனே பதில் சொல்லவில்லை. சிறிது நேரத்துக்குப் பிறகு ஒரு பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னான்: “ராஜா! அவள் ஆசையைப் பூர்த்தி செய்வதில் உனக்கு நான் ஒரு அடிகூடப் பின்வாங்க மாட்டேன். ஆனால் இந்த விஷயத்தில் நீ செய்வது எனக்குச் சரியென்று தோன்றவில்லை!”

ராஜாவால் சாரங்கன் பேச்சை நம்பவே முடியவில்லை. தான் சொன்னவுடன் அவன் குதித்தெழுந்து தன்னை ஆமோதிப்பான் என்று நினைத்துக் கொண்டிருந்தான் அவன்.

“சாரங்கா! இன்றைய தினம் நாம் இதைச் செய்யாவிட்டால் நமக்குக் கோழைகள் என்ற பட்டம்தான் கிடைக்கும். பிறகு நாம் தனி சர்க்காரைக் கலைத்து விடவேண்டியதுதான்!”

“யார் எது சொன்னால் நமக்கென்ன? நம் பலத்தை நாம் அறிவோம். தவிர, நீ சொல்கிறபடி செய்தால் வரப்போகும் லாபம் என்ன? இன்றைய தினம் நம்மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் நம்மைப் போன்ற இந்தியர்கள். அவர்களை நாம் தீர்த்து விடுகிறோமென்று வைத்துக் கொள்வோம். அத்துடன் பிரிட்டிஷ் சர்க்கார் இந்த இடத்தை விட்டு ஓடிப்போய் விடுவார்களா? இன்னும் பலமான படை ஒன்றை அனுப்புவார்கள். அதனால் நமக்குக் கஷ்டமும் நஷ்டமும் அதிகமாகும்.”

“சாரங்கா! உன் பேச்சுக்கு என்னால் பதில் சொல்ல முடியாது. இது விவாதம் செய்து முடிவு செய்யக்கூடிய விஷயமும் அல்ல; அதற்கு அவசியமும் இல்லை. நான் சொல்கிறபடி செய். இங்கே யிருக்கும் வானர சேனை ஆட்களை யெல்லாம் கூப்பிடுவோம். அவர்களில் பெரும்பான்மை

யோர் யார் சொல்வதை ஆமோதிக்கிறார்கள் பார்ப்போம். அதன்படி நாம் இருவரும் நடக்கலாம். என்ன, சரிதானே?" என்றான் ராஜு.



சாரங்கனும் வேண்டா வெறுப்பாக இதை ஒப்புக் கொண்டான். ஆனால் அவர்கள் என்ன சொல்வார்கள் என்பதைப் பற்றி மட்டும் அவனுக்குச் சந்தேகமே யிருக்கவில்லை.

அன்று இரவு பன்னிரண்டு மணிக்குக் காவேரிப் பாக்கத்துக்கு அருகில் இருந்த பன்னிரண்டு குடிசைகளும் 'திகு திகு' வென்று எரிந்தன. எட்டியிருந்து அதைப் பார்த்துக் கொண்டிருந்த வானர சேனை வீரர்கள் கோலாகலம் செய்தார்கள். அந்த வெறியில் தங்கள் சேனாபதியின் மரணத்தால் ஏற்பட்ட துக்கத்தையும் அவர்கள் கொஞ்சம் மறந்திருந்தார்கள்.

ஆனால் சாரங்கன் மட்டும் அன்றைய தினத்திலிருந்து தனி சர்க்காரின் வீழ்ச்சி ஆரம்பித்து விட்டதென்பதை உணர்ந்தான்.

பதினாறும் அத்தியாயம்
பிரிவு உபசாரம்

தனி சர்க்காருக்கு நாளுக்கு நாள் இடையூறுகள் அதிகமாகிக் கொண்டு வந்தன. அத்துடன், அதுவரை ஒருவித வித்தியாசமும் இல்லாமல் நடந்த அரசாங்கத்தில் அபிப்பிராய பேதங்கள் அடிக்கடி தலை காட்டின.

கிருஷ்ணகுமாரிக்குப் பிறகு அவர்கள் தங்களுக்குத் தலைவர் என்று யாரையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லை. கூட்டுத் தலைவர்களாக ராஜுவும் சாரங்கனும் சேர்ந்து வேலை செய்வதாக ஏற்பாடு. ஆனால் இது நடைமுறையில் அவ்வளவு சரிப்பட்டுவரவில்லை.

சிவனேரியிலேயே சிலர் 'எதிரி'யின் பக்கம் சேர்ந்து, அவர்கள் சார்பாக வேவு பார்க்கிறார்கள் என்று ராஜுவுக்குத் தெரிய வந்தது. அவர்களில் ஒருவனைத் தக்க ருஜுவுடன் வானர சேனை பிடித்து விட்டது. தண்டனை என்ன கொடுப்பது என்பதுபற்றி ராஜுவுக்கும் சாரங்கனுக்கும் விவாதம் நடந்தது. அவனை ஊரை விட்டுத் துரத்தி விட்டால் போதும் என்று சாரங்கன் சொன்னான். ஆனால் ராஜுவோ அப்படிச் செய்தால் அவனுக்கு அதிக கஷ்டம் ஒன்றுமில்லையென்றும், அம்மாதிரி லேசாக அவனை விட்டுவிட்டால், துரோகிகளின் எண்ணிக்கை அதிகமாகும் என்றும் வாதித்தான். கடைசியில் அவன் சொத்தைப் பறிமுதல் செய்து, ஊரை வெட்டும் வேலைக்கு அனுப்பி விட்டார்கள்.

இன்னொரு நாள் சாரங்கன் வெளியே போயிருந்தபோது, வழியில் கை துண்டிக்கப்பட்ட ஒருவன் கீழே விழுந்து புலம்பிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவன் சொல்லியதிலிருந்து, வானர சேனைதான் அவனுக்கு அத்தகைய தண்டனை விதித்தது என்பதைச் சாரங்கன் அறிந்து கொண்டான். வானர சேனை ராஜுவின் அதிகாரத்துக்கு உட்பட்டது. சாரங்கன் நேரே அவனிடம் சென்று, தான் கண்டதைப் பற்றிக் கேட்டான். "ஆமாம், சமீபத்தில் ஒருவனுக்கு அம்மாதிரி தண்டனை விதிக்கப்பட்டது உண்மைதான்!" என்றான் ராஜு.

"இம்மாதிரி காட்டுமிராண்டித்தனமான தண்டனைகளெல்லாம், காருண்யமுள்ள பிரிட்டிஷ் சர்க்காருடன் போய்விட்டதென்றல்லவா நினைத்தேன்?"

"சாரங்கா, அந்தப் பயல் என்ன செய்தான் தெரியுமா? நம் வானர சேனை சாரணன் வேணுவின் பெண்டாட்டி பக்கத்து ஊருக்குக் கொஞ்ச நாளாகப் போயிருக்கிறாளாம். அதை இவன் தெரிந்து கொண்டு, அங்கே வேணுவைப் பிடித்து விடலாம் என்று போலீஸ்காரர்களுக்குத் தகவல் கொடுத்தானும். அதோடு, அவ

ளைக் காட்டிக் கொடுப்பதற்காகப் போலீஸ்காரர்களோடு இவனும் அங்கே போனானும். வேலுவின் சம்சாரத்தைப் போலீஸ்காரர்கள் மிரட்டிப் பார்த்தார்களாம். அவள், வேலு அங்கு வருவதேயில்லை யென்றும், அவன் எங்கேயிருக்கிறான் என்பது தனக்குத் தெரியாதென்றும் சொன்னாளாம். இந்தப் பயல் என்ன செய்தானும் தெரியுமா? பூரண கர்ப்பிணியாயிருந்த அவள் வயிற்றைச் சுட்டிக் காட்டி, 'இதிலிருந்தே அவள் பொய் சொல்லுகிறாள் என்பது தெரியவில்லையா?' என்றானும் ...... அப்படிச் சுட்டிக் காட்டின கையைத்தான் வானர சேனைக்காரர்கள் வெட்டி விட்டார்கள். ஆனாலும் அதற்காக நான் அவர்களைக் கண்டித்தேன். இம்மாதிரி குற்றவாளிகளை விசாரித்த பிறகுதான் தண்டிக்க வேண்டுமென்றும், தண்டனை விதிப்பது நம் பொறுப்பு என்றும் படித்துப் படித்துச் சொன்னேன். 'இனிமேல் அவசரப்பட்டுக் கொண்டு ஒன்றும் செய்ய மாட்டோம்' என்று அவர்களும் வாக்குக் கொடுத்திருக்கிறார்கள்" என்றான் ராஜு.

ஆனால் இம்மாதிரியான சம்பவங்கள் அத்துடன் நின்றுவிடவில்லை. வானர சேனை ஜனங்களைத் தொந்தரவு செய்கிறதென்றும், தனி சர்க்காரோடு பூரணமாக ஒத்துழைக்காதவர்கள் பாடு வெகு திண்டாட்டமாக இருக்கிறதென்றும் அடிக்கடி புகார்கள் வந்தன. ராஜுவிடம் சாரங்கன் இவைகளைப் பற்றி அடிக்கடி பிரஸ்தாபிப்பான். அவனுக்கு இவன் இம்மாதிரி திருப்பித் திருப்பிக் குற்றம் சொல்வது பிடிக்கவில்லை. ஒரு பக்கம் கிருஷ்ணகுமாரி ஆரம்பித்த காரியத்துக்குத் தன்னால் இம்மியளவேனும் கெடுதல் நேரிடக் கூடாது என்று சாரங்கன் எண்ணினாலும், அபிப்பிராய பேதம் வலுத்தபிறகு இருவரில் ஒருவர் விலகிக் கொள்வது மேல் என்று அவன் உள்ளறிவு சொல்லிற்று.



இந்தச் சமயத்தில்தான் காந்தி மகான் விடுதலையாகி ஓர் அறிக்கை விடுத்திருந்தார். அதில், இரகசியமாக வேலை செய்வது அஹிம்சை தர்மத்துக்கு ஒவ்வாதென்றும், 'அண்டர் கிரவுண்'டில் இருப்பவர்கள் எல்லோரும் வெளியில் வந்து அரசாங்கத்தினிடம் தங்களைத் தாங்களே ஒப்படைத்துக் கொள்ள வேண்டுமென்றும் அவர் ஆக்ஞாபித்திருந்தார்.

இதைப்பற்றிச் சிவனேரியில் மந்திராலோசனை நடந்தது. சாரங்கன், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தனி சர்க்காரைக் கலைத்து விடுவதுதான் நல்லது என்று சொன்னான். தனி சர்க்காரின் ஆட்கள் இப்பொழுதெல்லாம் ஜனங்களை உபத்திரவம் செய்கிறார்கள் என்றும், தங்கள் அதிகாரத்தைச் செலுத்துவதிலேயே அவர்கள் முனைந்திருக்கிறார்களென்றும், ஜனங்களின் சௌகரியத்தை அவர்கள் கவனிப்பதில்லை யென்றும், இந்தக் காரணங்களால் தனி சர்க்காரின் செல்வாக்கு குறைந்து போய்விட்டதென்றும் அவன் வாதித்தான்.

ராஜு, சாரங்கன் சொல்வதெல்லாம் ஆதாரமற்ற புகார்களென்றும், தனி சர்க்கார் பொறுப்பை உணர்ந்துதான் நடக்கிறது என்றும் சாதித்தான். இத்துடன், "காந்திஜி சொன்னது நம்மைப் போன்றவர்களுக்கு அல்ல. தனித் தனியே நின்றுகொண்டு பாலத்தை உடைப்பதிலும், ரயிலைக் கவிழ்ப்பதிலும், கச்சேரிகளைக் கொளுத்துவதிலும் ஒருவிதப் பிரயோசனமும் இல்லை என்றுதான் அவர்களை அவர் வெளியே வரச் சொல்கிறார் ...... நான் கூடக் கேள்விப்பட்டேன், யாரோ ஐந்தாறு 'அண்டர் கிரவுண்ட்' ஆசாமிகள் காந்திஜியிடம் போய், தாங்கள் வெளியே வர விரும்புவதாகவும், தங்கள் கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படாத முறையில் அதைச் செய்ய காந்திஜியே ஒரு வழி சொல்ல வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்களாம். அதற்கு மேல்தான் காந்திஜி அந்த அறிக்கையை விடுத்தாராம் .... தவிர, ரகசியமாக வேலை செய்கிறவர்களைத் தானே காந்திஜி குறிப்பிடுகிறார்? நாம் அப்படி இருக்கவில்லையே! ஒரு குழந்தையைக் கேட்டாலும் நாம் எங்கே

இருக்கிறோம் என்று சொல்லி விடுமே!" என்றும் அவன் சொன்னான்.

அதற்குப் பிறகு வானர சேனை 'காப்டன்' சுப்பராயலு எழுந்திருந்து, "என் சேனை கடவுளுக்கு முன்னால், கிருஷ்ணகுமாரியின் ஒவ்வொரு ஆக்ஞையையும் மறு பேச்சின்றி—உயிர் போனாலும் நிறைவேற்றுவதாக வாக்களித்திருக்கிறது. தேவி இறந்து விட்டாலும் அவருடைய ஆக்ஞை இறக்கவில்லை. உயிர் போனாலும் நாங்கள் எதிரியிடம் சரணடைய மாட்டோம்!" என்று கர்ஜித்தான்.

கரகோஷத்துடன் சபை அவன் சொன்னதை ஆமோதித்தது.

• • •

அன்றிரவு சாரங்கன், ராஜுவைத் தனியாகச் சந்தித்தான்.

"ராஜு! நான் செய்யப் போவதை நீ சரி என்று ஒப்புக் கொள்ளா விட்டாலும், என் ஆத்ம சுத்தியை நீ சந்தேகிக்க மாட்டாய் என்பது எனக்குத் தெரியும். எனக்கென்னவோ நமக்குள் அபிப்பிராய பேதம் இவ்வளவு அதிகமாகப் போனபிறகு இங்கிருப்பது உசிதமாகப் படவில்லை. வானர சேனையும், இவ்வூர் ஜனங்களும் உன்னிடம்தான் பூரண நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். நீயே அவர்களுக்குத் தகுந்த தலைவன். உன்னுடைய மனமும் அவர்களுடைய மனமும் ஒத்திருப்பதால் உன்னால்தான் அவர்களை நடத்திச் செல்ல முடியும்......நான் விடியற்காலையில் புதுச்சாலை போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், சரணாகதி யடைந்துவிடப் போகிறேன். ஜனங்கள் என்னை 'கோழை, பயந்தாங்கொள்ளி' என்று சொன்னாலும் எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. நீ ஒருவனாவது என்னைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொண்டிருந்தால் போதும்!" என்று சாரங்கன் உணர்ச்சியோடு கூறினான்.

"நிஜமாகவா சாரங்கா, நீ அப்படிச் செய்யப்போகிறாய்? நமக்குள் இருக்கும் அபிப்பிராய பேதம் அவ்வளவு பிரமாதமானதா? நான் சொல்வதைக் கேள்: இன்றைய ராத்திரிக்குள் நான் எல்லாவற்றையும் உன்னிடம் ஒப்படைத்து விடுகிறேன். அதற்குப் பிறகு நீ சொல்கிறபடி நான் கேட்கிறேன்" என்று ராஜு உள்ளம் வெதும்பிச் சொன்னான்.

"ராஜு! எனக்குத் தெரியும், நாம் எவ்வளவு சண்டை போட்டுக் கொண்டாலும், அது ஒரு குடும்பத்துக்குள் நடக்கும் சில்லறைத் தகராறு மாதிரி அன்றோடு தீர்ந்து போய்விடும் என்று!...... ஆனால் என் மனச்சாட்சி சொல்லுகிறபடி நான் செய்கிறேன்......அது போகட்டும். இன்னொரு முக்கியமான சமாசாரம் உன்னிடம் சொல்ல வேண்டும். உன் பூமாவை நான் தெரியாமல் கல்யாணம் செய்து கொண்டு விட்டேன்......தெரிந்த பிறகு அவளை என் மனைவி என்று நான் நினைக்கக்கூட இல்லை. உலகம் என்ன வேணுமானாலும் சொல்லட்டும், நீயும் அவளும்......"


ராஜு சட்டென்று சாரங்கனின் வாயைப் பொத்தினான். "எனக்கு ரொம்ப நாளாகத் தெரியும். அன்று என் அறையில் நான் சொன்னதைக் கேட்டு நீ பதைபதைத்தாயல்லவா? அப்போதே நான் சந்தேகப் பட்டேன். பிறகு நான் விசாரித்துத் தெரிந்து கொண்டேன். ஏதோ சின்னக் குழந்தையாக இருந்தபோது மனதில் தோன்றியதை அவ்வளவு பிரமாதப்படுத்தி உன்னிடம் சொல்லி விட்டேனே என்று ரொம்ப வருத்தப்பட்டேன்...பூமாவுக்குத் தகுந்த அகமுடையான் நீதான் என்று அப்புறம் சந்தோஷப் பட்டேன்......இதோ பார்! நான் இதை உங்களிடம் தனிக் குடித்தனம் வைத்தவுடன் பரிசாகக் கொடுக்க வேண்டும் என்று எடுத்து வைத்திருந்தேன்" என்று சொல்லிக் கொண்டே ராஜு பீரோவைத் திறந்து, ஒரு பாரதமாதா விக்கிரகத்தை எடுத்துக் கொடுத்தான்.



சாரங்கனுக்கு இதெல்லாம் ஏதோ ஒரு நாடகத்தில் நடக்கும் காட்சிபோல் இருந்தது. அன்றிரவே அவன் ராஜுவிடம் விடைபெற்றுக் கொண்டு சிவனேரியை விட்டுக் கிளம்பி விட்டான். மறுநாள் விடியற்காலையில் அவன் புதுச்சாலை போலீஸ் ஸ்டேஷனில் சரணாகதி யடைந்து விட்டான். (தொடரும்)


ஆயுதங்களை உதறியெறிவதுடன், தங்கள் மனதிலுள்ள துவேஷம், பகை இவற்றையும் உதறித் தள்ளுவதே காந்தி ஜெயந்தி வார வைபவத்தைச் சிறந்த முறையில் கொண்டாடுவதாகும்.
மகாத்மா காந்திக்கு ஜே!
மகாத்மா காந்திக்கு ஜே!
மகாத்மா காந்திக்கு ஜே!
இன்னுமா தாமதம்! ஆஹா! எவ்வளவு ருசியாயிருக்கிறது? சாப்பிட்டுப் பார்!
திவான் சர் ராமசாமி முதலியார்

பழமையும் புதுமையும்




நம் முன்னோர்கள் தங்களுடைய பற்களை ஆலம்விழுது, வேப்பங்குச்சி முதலியவைகளால் சுத்தம் செய்துகொண்டிருந்தார்கள்.

தற்காலத்தில் நாம் ரஸாயனசாஸ்திரத்தின் உதவியால் கோலினாஸ் பல்பேஸ்டைக் கொண்டு பற்களை சுத்தசெய்து சுத்தமாகவும் கெட்டியாகவும் வைத்துக்கொள்ள முடிகிறது. ஏனென்றால் கோலினாஸ் நுரை பல் இடுக்குகளில் சென்று பரிஷ்காரப்படுத்தி, ருசி, வாய் சுத்தம், பரவசத்தையும் இனிமையாக்குகிறது.

KOLYNOS

கோலினாஸ்
சிக்கனமானது
½ அங்குல பேஸ்ட்
தான் தேவையானது



KI.2 TAM

K. S. E.

நவராத்திரி பண்டிகைக்குப்
புதுமாதிரியான உயர்ந்த ரக
கொள்ளேகாலம் பட்டுச் சேலைகள்

★

கிடைக்குமிடம் :

காத்தாயி ஸில்க். எம்போரியம்

கீழமாட வீதி, மயிலாப்பூர், மதராஸ்

தி ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிட்.

தலைமை ஆபீஸ் : அரண்மனைக்காரத் தெரு
தபால் பெட்டி நெ. 182, மதராஸ்

நம்பிக்கையைத் தூண்டும் புள்ளி விவரம் :

1947	புதுப்பித்த செலவு ரீதி	9·75 சதவிகிதம்
	புதிய வியாபாரம்	ரூ. 82 லக்ஷம்
	ஆயுள் நிதி	ரூ. 32·75 லக்ஷத்திற்குமேல்


1945, டிஸம்பர் 31ம் தேதி முடிய ஐந்து வருஷத்திற்கொரு முறை வழங்கப்பட்ட போனஸ் மதிப்பு : வருஷத்திற்கு ரூ. 1,000க்கு ரூ. 6

வருங்கால வாழ்க்கையில் முன்னேறிப் பயன் பெற எமது

கோவாபரேடிவ் லைப் ஆபீஸைச் சாருங்கள்

ஏஜென்ஸிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

நோயுற்ற குழந்தைகளுக்குப் பல வருடங்களாக சேவை புரிந்து வருகிறது





ஜம்மியின் லிவர்க்யூர் பல்லாண்டுகளாக செய்து வரும் சேவையால் ஆயிரக்கணக்கான விலையற்ற சிற்றுயிர்கள் ஈரல் குலைக்கட்டி வியாதிகளிலிருந்து காப்பாற்றி மனித சமூகத்திற்கு விசேஷ நன்மை புரிந்துவருகிறது.

டாக்டர்கள் இவ்வியாதியைபோக்க ஆரம்ப நிலை, கட்டி முதிர்ந்த நிலைக்குத்தகுந்தவாறு 'சிம்பிள்' அல்லது 'காம்ப்பிளிகேட்டட்' லிவர்க்யூர் மருந்துகளை சிபார்சு செய்து இவ்வியாதியை குணப்படுத்துகிறார்கள்.

ஜம்மியின் சிம்பிள் லிவர்க்யூர் சிறிய அளவில் கொடுத்துவர, வியாதி வராமல் தடுக்கவும், பசி, ஜீரண சக்திவிருத்தி செய்யவும் மலச்சிக்கல்களைப் போக்கி ஈரல், குலைகளை சரியானபடி வேலைசெய்கிறது.

முன்னால் ஈரல் குலைக்கட்டி நோயினால் பிடிக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார்கள் திரும்பவும் கர்ப்பம் தரிக்கும் பொழுது ஜம்மியின் டானிக்கை உபயோகப் படுத்துவது நல்லது. பிறக்கப் போகும் குழந்தையின் ஈரல், குலைகள் தாய் மூலமாய் ஏற்படுகிறது என்ற ஆயுர்வேத சித்தாந்தத்தை அனுசரித்து இந்த டானிக் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜம்மியின் லிவர்க்யூர்



எங்கும் கிடைக்கும்.

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்

மைலாபூர், மதராஸ், (போன் நெ. 8139)

தெப்பகுளம், திருச்சிராப்பள்ளி, பெரிய தெரு கும்பகோணம், பெங்களூர், பம்பாய் 4, (போன் நெ. 41593) மற்றும்: கல்கத்தா, லக்னோ, etc.

ADARTS J. 234 TAMIL

நரி ராஜா



பி. ஸி. பலராமன்

நாம் எல்லோரும் சுதந்திரம் அடைந்துவிட்ட செய்தி எப்படியோ காட்டுத் தீ போல் காட்டுப் பிரஜைகளுக்குத் தெரிந்து விட்டது.

"ஓகோ! இந்த மனிதர்கள் பொல்லாதவர்கள். அவர்கள் மட்டும் சுதந்திரம் வாங்கிக் கொண்டு நம்மை இன்னும் அடிமைகளாக வைத்திருக்கிறார்கள். நாம் சும்மா இருக்கக் கூடாது!" என்று எல்லா மிருகங்களும் பேசிக் கொண்டன.

பேச்சு பிரசங்கமாக மாறி, கடைசியில் 'விடுதலை மகாநாடு' ஒன்று கூட்டுவதாகத் தீர்மானித்தன. தலைமை வகிப்பதற்குக் குரங்கார் சந்தோஷமாக ஒப்புக் கொண்டார்.

ஆனால் காட்டிலுள்ள நரிக்கு மாத்திரம் மற்ற மிருகங்களின் செய்கை கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. "நாம் தான் எப்பொழுதும் சுதந்திரமாக இருக்கிறோமே! நமக்கு ஏன் இந்த விடுதலை மகாநாடு?" என்று அது எண்ணிற்று.

கடைசியில் அந்த நரிக்கு ஒரு யோசனை தோன்றியது. "நாம் ரொம்ப நாளாக ஆசைப்பட்டுக் கைகூடாமல் இருந்த காரியம் கை கூடியது!" என்று அது சந்தோஷத்துடன் தனக்குள் சொல்லிக் கொண்டது.

குறிப்பிட்ட தினத்தில் காட்டில் ஏக அமளி. தொண்டர் படையைச் சேர்ந்த மிருகங்கள் தலைவர் குரங்காரை யானைமேல் ஏற்றி ஊர்வலமாக அழைத்து வந்தன. "விடுதலை நமது காட்டுரிமை" என்றும், "மனிதர்கள் ஒழிக!" என்றும் அவை வானளாவ கோஷமிட்டுக் கொண்டுவந்தன. கூட்டம் மகாநாட்டுப் பந்தலுக்குள் நுழைந்ததும் தலைவர் குரங்கார் தம் ஆசனத்தில் அமர்ந்தார்.

ஏக கரகோஷங்களுக்கிடையே குரங்கார் எழுந்து தமது தலைமைப் பேருரையைத் தொடங்கினார்.

"ஹே, பெரியோர்களே! நாம் இத்தனை நாள் மனிதர்களுக்கு அடிமையாய் இருந்தது போதும். மனிதர்கள் நம்மை எப்படியெல்லாம் சூழ்ச்சி செய்து அடக்கி ஆள்கிறார்கள் தெரியுமா? சொல்லுகிறேன் கேளுங்கள்:

"எங்கேயோ ஆப்பிரிக்கா தேசத்திலிருக்கும் சிங்கம் நமக்கெல்லாம் ராஜாவாம். அந்த ராஜாவை நம்மில் யாராவது பார்த்திருக்கிறோமா?"


"கிடையாது, கிடையாது!" என்று எல்லா மிருகங்களும் ஆத்திரத்தோடு கத்தின.

"பொறுங்கள், முதலில் நாம் தர்ம ரீதியாக ஒரு காரியம் செய்வோம். அதாவது நம்முடைய குறைகளைப் பற்றிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றி மனிதர்களுக்கு அனுப்புவோம். அதற்கு மனிதர்கள் இணங்கா விட்டால் பிறகு நாம் கிளர்ச்சி செய்வோம்!" என்றார்.



இந்தச் சமயத்தில் 'குசு குசு' என்ற பேச்சுக்கள் கிளம்பின. மேடையை நோக்கிக் காகிதங்கள் வேறு பறந்து வந்தன. தலைவர் குரங்காரின் 'டங்'கென்ற மணி

யோசை கேட்டதும், 'கப்சிப்'பென்று எல்லா மிருகங்களும் அடங்கி விட்டன. கடைசியில் குரங்கார் எழுந்து மகாநாட்டுத் தீர்மானங்களை வாசிக்கத் தொடங்கினார்.



1. மனிதப் பிள்ளைகளின் புஸ்தகங்களில் "மிருகங்களுக்கு அரசன் சிங்கம்" என்று எழுதியிருக்கிறது. அதை உடனே எடுத்துவிட வேண்டுமென்று இம் மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

2. மிருகங்களைக் கொஞ்சங்கூட மதிக்காமல் "மிருகக் காட்சிச் சாலை" என்று பெயர் வைத்து, அதில் நம்மவர்களைச் சிறைப்படுத்தி வைத்திருப்பதை இம்மகாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், அங்கே அடைபட்டிருக்கும் எல்லா மிருகங்களையும் பத்திரமாகக் காட்டில் கொண்டு வந்து விட்டு விடும்படி இம் மகாநாடு கோருகிறது.

இப்படி தீர்மானங்களை வாசித்துக் கொண்டு போகும்போது, இதுதான் சரியான சமயம் என்று நரி எழுந்து, "ஹே, மிருகங்களே! இந்தத் தீர்மானங்களை யார் எந்த மனிதரிடம் கொண்டு போய்க் கொடுப்பது என்று யோசித்தீர்களா?" என்று கேட்டது.

உடனே புலி யானையைப் பார்த்து, "நீ கொண்டு போ!" என்றது.

யானை கரடியைப் பார்த்து, "நீதான் அதற்குச் சரியான ஆள்!" என்று சொல்லிச் சந்தடி செய்யாமல் வீட்டுக்குப் போய்விட்டது.

இப்படியே ஒவ்வொரு மிருகமும் இன்னொரு மிருகத்தைப் பார்த்து, "நீதான் சரியான ஆள்; நீதான் சரி!" என்று சொல்லிக் கொண்டே 'தப்பினோம், பிழைத்தோம்!' என்று வீட்டைப் பார்த்து ஓடி விட்டன.

மிஞ்சியிருந்த சில மிருகங்கள், "குரங்காரையே கொண்டு போகச் சொல்லுவோம்" என்று மேடையை நோக்கி விரைந்தன.

"குரங்குதான் அப்பொழுதே கூட்டத்தைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் ஓடி விட்டதே!" என்று சொல்லிவிட்டுச் சிட்டாய்ப் பறந்தது சிட்டுக் குருவி.

அவ்வளவுதான்; நரி அன்று இரவோடு இரவாக,

"மிருகங்களுக்கு விடுதலை:


நரிதான் மிருக ராஜா!"

இப்படிக்கு,
மனிதர்கள்.

என்று எழுதி, மரங்களிலும் மலைப் பாறைகளிலும் ஒட்டி விட்டது.

மறுநாள் காலை நரி, "நான்தான் மனிதர்களிடம் நேற்று குரங்கார் நிறைவேற்றிய தீர்மான ஜாபிதாவைக் கொண்டு போய்க் கொடுத்தேன். மனிதர்கள் என் தைரியத்தை மெச்சி, அதோ ஒட்டியிருக்கிறதே, அதன்படி எழுதிக் கொடுத்து விட்டார்கள்!" என்றது.

எல்லா மிருகங்களும் நரி சொன்னதை அப்படியே நம்பி, அன்று முதல் அதையே தங்கள் ராஜாவாகவும் ஏற்றுக்கொண்டு விட்டன!




உலகில்
மிகச் சிறந்த
பௌண்டன் பேனா

ஏனென்றால் எல்லா சீதோஷ்ண ஸ்திதியிலும் தன்மையை இழக்காமலிருக்க விசேஷமாக ப்ளாட்டினம் தோய்க்கப் பட்டிருக்கிறது—உறுதிக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஏனென்றால், உலகத்தில் கோடிக் கணக்கானவர்களுக்கு இருபத்தைந்து வருஷங்களாக ப்ளாட்டினத்தின் மேலே ஒரு விசேஷ மோஸ்தர் ஏற்பட்டிருக்கிறது.

ஏனென்றால், கெடுவதற்கு ஆதாரமே இல்லாமல், எந்த விதமான மசியிலும் நன்றாக எழுதக் கூடியது.

ஏனென்றால், இந்த ஏற்றமான விலையிலும் உலகில் அதிகமாக வாங்கி வழங்கப்படுகிறது.



விலை
ரூ. 3/1

GOLDEN
Platignum

கோல்டன்
ப்ளாட்டினம்

இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டது

வியாபார நிபந்தனைகளுக்கு கீழ்க்கண்ட
பூரண உரிமையாளர்களுக்கு எழுதவும்:
முல்லர் & பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்
குவீன் மான்ஷன்ஸ்
பாஸ்டியன் ரோடு, பம்பாய்

Ad. No. PI.R

கோகுல்
சந்தனத் தைலம்
அரைக்கீரை விதைத் தைலம்
கூந்தல் தைலம்





எங்கள் தயாரிப்புகள் ஒவ்வொன்றிலும் கோகுல் டிரேட் மார்க் இருப்பதை கவனியுங்கள்.

டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்.

மதராஸ் ஏஜண்டு:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி :: மதராஸ்
கோவை, நீலகிரி ஜில்லாக்கள்
& பாலக்காடுக்கு ஏஜண்டு:
B. பாலபட்டாபி,
வைசியாள் தெரு, கோயமுத்தூர்



உங்கள் வயது உங்களின் ஆரோக்கியத்தைப் பொறுத்தது!...

தளாவு, சோர்வு, குழி விழுந்த கண்கள் இவைகள் நிஜ வயதை அதிகப்படுத்திக் காட்டுகின்றன. இதற்கு காரணம் தங்கள் குடல் சரிவர வேலை செய்யாமல் மலச்சிக்கல் ஏற்படுவதினால் தான். தித்திப்பான போனோமின்ட் உங்களுக்கு சௌகரியத்துடன் சௌந்தர்யத்தையும் அளிக்கும்.

சுலபமாக
மலமிளக்கும்
உன்னத சஞ்சீவி

போனோமின்ட்
லாக்ஸேடிவ் சூயிங் கம்

ரூ. 1—2—0, ரூ. 0—7—0 ஆகிய இரு சைஸ்களில் எங்கும் கிடைக்கும்

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜண்டுகள் :

ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி, 99-A, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

No. 1.

இருமலுக்கும்

ஜலதோஷ-
த்திற்கும்



ஸிரோலின்
"ரோச்"

போட்டிக் கதை—12



ம. சி. கல்யாணசுந்தரம்

"மூர்த்தி! வேண்டாம், வேண்டாம்! அலைகள் தங்கள் இஷ்டப்படியே புரண்டு கொண்டிருக்கட்டும்!" என்று நான் கண்டிப்பது போன்ற குரலில் எச்சரிக்கை செய்ததும், நாராயணமூர்த்தி திடுக்கிட்டுத் திரும்பி, "ஊம்......என்ன?" என்று வினவினான்.

"இல்லை; நானும் ஐந்து நிமிஷமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன், நீ ஏகாக்ர சித்தனாய், அன்பும் அனுதாபமும் நிறைந்த கண்களுடன், சமுத்திரத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாயே! ஒரு வேளை யோக சக்தியால் கடலின் சலனத்தைப் போக்கி, அதை அமைதியான நித்திரையில் ஆழ்த்தப் பார்க்கிறாயோ என்று நினைத்தேன்!" என்றேன் நான்.

நாராயணமூர்த்தி நான் சிறிதும் எதிர்பாராத மனக் கசப்புடன் பெருமூச்செறிந்து, "யோக சக்தியாம்! அலைகளுக்கு அமைதி யளிப்பதாம்! முதலில் என் மனமாகிய குரங்கைச் சிறிதளவேனும் கட்டுப்படுத்த முடிந்தாலல்லவா, பிறருக்கு உபதேசம் செய்யலாம்! ஆனால், நீது! அசைவு முற்றிலும் ஒழிந்து, பூர்ண அமைதி ஏற்படுவது சாத்தியமான காரியமா?" என்று கேட்டான்.

"எனக்குத் தெரிந்த வரை, அசைவுதான் இயற்கையின் குணம். நக்ஷத்திர மண்டலங்களை எடுத்துக் கொண்டாலும் சரி, கண்ணுக்குப் புலப்படாத பரம அணுக்களைக் கணித முறைகளால் சோதித்தாலும் சரி, சலனம்—பரபரப்பு—அமைதியின்மைதான் சிருஷ்டியின் முதல் கொள்கை என்று தெரிகிறது."

"ஆனால் பூஜ்யத்துக்குக் கீழ் 'Absolute zero' என்கிறார்களே, அந்த டிக்ரி வரை குளிரவைத்து விட்டாலோ? எல்லாம் கல்லாய் உறைந்து, சப்த நாடியும் அடங்கி, ஜட பதார்த்தமாய் அமைந்து விடும் என்று 'ஸயன்ஸ்' கூறுகிறதே!"

"அது வெறும் காகிதப் பரிசீலனை, ஆதர்ச நிலைமை, அனுபவத்துக்கு எட்டாதது, மூர்த்தி! அது ஒருபுறம் இருக்க, நம் மனதைக் கட்டுப்படுத்த அந்த வழி எப்படி உதவும்?"

"என் உதவாது? உன்னை அந்த எல்லை வரை குளிர வைத்துவிட்டால், மனம் தானாகவே அமைதி யடைந்து விடுமே!" என்று சொல்லி, மூர்த்தி 'பக்' கென்று சிரித்தான்.

"ஆம், சமாதி யடைந்து விடலாம்!" என்றேன் நான்.

இவ்வாறு பேசிக் கொண்டே நாங்கள் 'மீன் சாமியார்' உட்கார்ந்திருந்த இடத்தை நெருங்கினோம்.

"இவனை உனக்குத் தெரியுமா? வெறும் வேஷக்காரன்! அறிவில்லாத, மூட நம்

பிக்கை கொண்ட செம்படவர்களை ஏமாற்றித் திரியும் போலி சந்நியாசி!'' என்றான் மூர்த்தி.

ஓரளவு தியானத்தில் ஈடுபட்டிருந்த அந்தச் சந்நியாசி, அவன் சொன்னதைக் கேட்டதும், ''ஆம், தம்பி! நானும் இந்தச் செம்படவர்களிடம் இதையேதான் கிளிக்குச் சொல்வது போல் படித்துப் படித்துப் பல முறை சொல்கிறேன்; காதில் வாங்கிக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள். நீயாவது சிரமம் எடுத்துக் கொண்டு இந்த அப்பாவிகளின் பிரமையைப் போக்கினால், இந்தப் பொய் வாழ்க்கையிலிருந்து எனக்கு விடுதலை கிடைக்கும்!'' என்று கெஞ்சும் குரலில் கூறினார்.

மூர்த்தி, அசடு தட்டும் முகத்துடன், ''ஏதோ பேச்சு வாக்கில் சொன்னேன்; மன்னிக்க வேண்டும்!'' என்றான்.

''இல்லை, அப்பா! நீ முதலில் சொன்னதுதான் உண்மை — அதாவது, நான் சம்பந்தப்பட்ட வரையில்! ஆனால் செம்படவர்களோ, தங்களுடைய அபார பக்தியால் என்மீது ஒரு சிறு சக்தியையே ஆரோபித்து விட்டார்கள்—வெறும் இரும்பு ஊசியில் காந்த சக்தியை ஏற்றுவதுபோல! கப்பலில் இருக்கும் காந்த ஊசி 'என்னை விட்டு விடுங்கள்; முன்போல் கிழிந்த ஆடைகளைத் தைப்பதே எனக்குப் பிரியம்' என்றால், மாலுமிகள் அதைப் போக விட்டு விடுவார்களா?'' என்றார் சந்நியாசி, பரிதபிக்கும் குரலில்.

மூர்த்தி, அவரிடம் ஏதோ மரியாதை வார்த்தைகள் கூறிவிட்டு எழுந்தான். நானும் அவரிடம் விடை பெற்றுக் கொண்டேன். சிறிது தூரம் வரை, இருவரும் மௌனமாய்ச் சென்றோம். பிறகு, ''அவரை உனக்குத் தெரியுமா? 'நீலு!' என்று தோழன்போல் அழைத்தாரே!'' என்று மூர்த்தி கேட்டான்.

''தெரியும்; ஆனால் அவருடைய இப்போதைய நிலைமை நல்லதா, கெட்டதா என்று எனக்குத் தெரியவில்லை. எனினும் இதற்குக் காரணம் நான்தான். நினைத்தால் மனம் பதறுகிறது!'' என்றேன் நான்.

''இதென்ன, அப்பா! பழங் கதைகளில் வருமே, அதுபோல் பீடிகை ரகசிய மயமாயிருக்கிறதே! என்ன சமாசாரம், சொல்'' என்றான் மூர்த்தி.

நான் சொன்னதாவது :—

''மூர்த்தி! உண்மையிலேயே இது ஓர் எதிர்பாராத சம்பவம். இவரும் நானும் சிறு வயதில் சேர்ந்து படித்தவர்கள். பி.ஏ. தேறிய பிறகு நான் இந்த ஊரிலேயே பள்ளிக்கூட உபாத்தியாயரானேன்; அவர் ரெவென்யூ இலாகாவில் சேர்ந்து ஊர் ஊராய்ச் சுற்றி வந்தார். இரண்டு வருஷங்களுக்கு முன் ஒரு நாள், அவர் மூன்று மாத ரஜாவில் பட்டணத்துக்கு வந்திருந்தார். வெகு நாளைக்குப் பிறகு சந்தித்ததில் இருவருக்கும் ரொம்ப சந்தோஷம். அநேகமாய் நான் தவறாமல் இந்த இடத்தில் நாங்கள் உலாவ வருவோம். சம்பாஷணையும், நாம் பேசிக்கொள்வது போலத்தான் இருக்கும். ஒரு நாள் பலவிதமான பண்டாரங்களையும் சந்நியாசிகளையும் பற்றிப் பேச்சு வந்தது.

'காலம் மாறிவிட்டது, சாம்பசிவம்! படித்தவர், படிக்காதவர் அனைவருக்குமே சந்நியாசிகளிடம் நம்பிக்கை குறைந்து விட்டது!' என்று நான் சொன்னேன்.

'மனித சுபாவம்—முக்கியமாக, பாமர மக்களின் சுபாவம்—இன்னும் அடியோடு மாறிவிடவில்லை. கொடி, மரத்தை நாடுவது போல், கிழவன் கோலைத் தேடுவதுபோல், ஜனங்கள் பிறருடைய அனுபவத்தின் உதவியை நாடுகிறார்கள்; பொறுப்பைக் கழித்துக் கொள்ளவும் தங்கள் சிரமத்தைக் குறைத்துக் கொள்ளவும் அவர்கள் வழி தேடுகிறார்கள். பரோபகாரிபோல் பாசாங்கு செய்து, வேஷமும் நடிப்பும் சரியாக இருந்தால், அநேகமாக யாரையும் ஏமாற்றலாம். செய்து காட்டுகிறேன், பார்க்கிறாயா? பாக்கி விடுமுறை நாட்களுக்கும் வேலை வேண்டுமே!' என்றார் சாம்பசிவம்.

'சரி, சரி; ஏதாவது விபரீதமாகச் செய்துவைக்காதே! எது ஆரம்பித்தாலும் அரை குறையாகச் செய்யும் வழக்கந்தான் உன்னிடம் கிடையாதே!' என்று நான் பயத்துடன் சொன்னேன்.

'அப்படி என்ன ஆபத்து வந்துவிடப் போகிறது, நீலு? சொல், டெலிபோனும் மோட்டார்காரும் வைத்துக் கொண்டு லக்ஷாதிபதிகளை ஆட்டி வைக்கவா? அல்லது ஏழை வேஷம் போட்டு எளியவர்களின் மனதைக் கவரவா? இல்லை, மந்திரவாதி வேஷம்போட்டு, சாதாரண கிருகஸ்தர்களை அடிமைப் படுத்தவா, சொல்!' என்று அவர் வீரியம் பேசினார்.

'வேண்டாம், சாம்பசிவம்! விளையாட்டாக ஆரம்பித்த பேச்சை வினையாகக் கொண்டுவந்து முடிக்காதே! சர்க்கார் உத்தியோகஸ்தனுக்கு இந்த வம்பெல்லாம் ஏன்?' என்றேன்.


"கடைசியில் நான் பயந்தபடியே ஆகி விட்டது. ஒருநாள் காலை, கடலோரத்தில் ஒரு பண்டாரம் உட்கார்ந்திருந்தார். காஷாயம், விபூதி, ருத்திராக்ஷம் எல்லாம் அவருக்கு மிகவும் பொருந்தி யிருந்தன. சில நாட்கள் வரை ஒருவரும் அவரை விசேஷமாகக் கவனிக்கவில்லை. அதன் பிறகு ஒருவர் இருவராக ஆரம்பித்து, கடைசியில் செம்படவர்கள் வந்து கட்டுமரத்தில் ஏறுவதற்கு முன் இவரைக் கும்பிடத் தொடங்கினார்கள். இவர் ஒவ்வொருவனையும் உற்று நோக்கி, ஒருவன் கையில் கொஞ்சம் உப்பு, இன்னொருவன் கையில் ஒரு சிறு கல் அல்லது சிளிஞ்சல், மற்றொருவன் கையில் மீன் முள் ஒன்று — இவ்வாறாகக் கொடுத்து, வலை வீசுவதற்கு முன் கடலில் எறியும்படி ஜாடை காட்டுவார்; அல்லது கடலில் போட்டு விட்டு, வலை வீசாமலே கரை திரும்பச் சொல்வார். 'ஏன் சுவாமி?' என்று கேட்டால், மேலும் கீழும் மெல்லத் தலையை அசைத்து, சிநேக பாவத்துடன் முகம் மலர்வார். சிலரை, சரியாய் நடுப்பகலில் — உச்சி நேரத்தில் — கரை திரும்பிவிடும்படி எச்சரிக்கை செய்வார்.

"இதன் காரணமாகச் செம்படவர்களுக்கு ஏற்பட்ட லாப நஷ்டமென்ன, அவர்களுடைய அனுபவம் என்ன என்று என்னால் ஆராய்ந்து அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அவர்கள் நடந்து கொண்ட மாதிரியில் இவருடைய ஆசீர்வாதமும் எச்சரிக்கையும் பயனளித்ததாக அவர்கள் நம்பினார்கள் என்று எண்ண மட்டும் இடம் இருந்தது. அதற்கு அவர்களுடைய பக்தியும் நம்பிக்கையுந்தான் காரணமாக இருந்திருக்க வேண்டும். என் நண்பருடைய அபிப்பிராயமும் அதுவே. ஒரு நாள் நான் அவருடைய இருப்பிடத்திற்குச் சென்று, 'இதென்ன அநியாயம், சாம்பசிவம்? இந்த வேஷம் இன்னும் எத்தனை நாளைக்கு?' என்று கேட்டேன்.

'லீவ் முடியும் வரை! அவசியமிருந்தால் அரைச் சம்பளத்தில் இன்னும் ஒன்றிரண்டு மாதம் லீவ் வாங்கிக்கொள்ள உத்தேசம்!' என்று பதிலளித்து விட்டு, அவர் குறும்புடன் சிரித்தார்.

'கஷ்ட காலந்தான்! உங்கள் ஊருக்குக் கடிதாசி எழுதிவிடலாமா என்று கூட எனக்குத் தோன்றுகிறது!' என்றேன்.

'ஆம், நல்ல யோசனை! தந்தியே அடித்து விட்டால்! பணம் கொடுக்கட்டுமா? விலாசம் தெரியுமல்லவா!' என்று தன் காரியத்தில் தலையிட வேண்டாம் என்ற அர்த்தத்தில் அவர் கூறினார்.



"அவனை உனக்குத் தெரியுமா? வெறும் வேஷக்காரன்!......போலி சந்நியாசி!"

'அது கிடக்கட்டும்; அவர்களுக்கு அளிக்கும் உப்பு, இளிஞ்சல் முதலிய வஸ்துக்களின் உன் கருத்து என்ன?' என்று கேட்டேன்.

'மண்ணாங்கட்டி!' என்று விடையளித்தார்.

'மற்ற எச்சரிக்கைகள்?'

'அதே ரகம்தான்!'

'அப்படியானால் அவர்களுடைய திருப்திக்குக் காரணம்?'

'இது சரியான கேள்வி. என்பால் அவர்கள் கொண்ட நல்லெண்ணமே அதற்குக் காரணம். மனப் பொருத்தம் ஏற்பட்டு விட்டதால், அனுகூலமானதை என் ஆசீர்வாதத்தின் பலன் என்றும், பிரதிகூலமானதைத் தங்கள் தலைவிதி என்றும் அவர்கள் கருதி விடுகிறார்கள்!'

'அப்படியானால், ஆராய்ச்சியை வெற்றியுடன் இதோடு நிறுத்திக் கொள்ளலாமே!' என்று ஆவலுடன் கூறினேன்.

'இன்னும் கொஞ்சம் வேடிக்கை பார்க்கலாம்!' என்று அவர் தீர்மானமாகச் சொல்லி விட்டார். மேலே பேசுவது வீண் என்று நான் அத்துடன் திரும்பி விட்டேன்.

"நாட்கள் செல்லச் செல்ல, செம்படவர்கள் தங்கள் வழக்குகளை மீன் சாமியாரிடம் கூறத் தொடங்கினார்கள். அவரும் சமயோசிதப்படி ஒன்றிரண்டு வார்த்தைகளில் தீர்ப்புக் கூறினார். இனிப்போ, கசப்போ தீர்ப்பை அவர்கள் தங்கள் தலைமேல் ஏற்றுக்கொண்டார்கள்.

"இதற்கு மத்தியில், பலவித காணிக்கைகள் வர ஆரம்பித்து விட்டன. மீன் சாமியாரும் முதலில் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார். கடைசியாக, யோக்கியதையுள்ள மூன்று செம்படவர்களை நிர்வாகிகளாக நியமித்து, வசூலாகும் பொருள்களைக் குப்பத்தின் பொதுநன்மைக்காக உபயோகிக்கும்படி கட்டளை யிட்டார். தாமும் அடிக்கடி குப்பத்துக்குச் சென்று சுத்தமாக வாழும்படி உபதேசம் செய்தார். சில வாரங்களுக்குள், குப்பத்தின் தோற்றமே மாறிவிட்டது. நாளடைவில் அங்கு ஒரு சிறு பள்ளிக்கூடமும், வைத்தியசாலையும் தோன்றின. கள் குடி, சண்டை சச்சரவு முதலியன குறைந்து வந்தன.

"இதற்குள் சாம்பசிவத்தின் லீவு நாட்கள் தீர்ந்து விட்டன. அரைச் சம்பள ராஜாவும் பறந்து போயிற்று. ஆகவே, அவர் தன் பக்தர்களைத் திரட்டி, ஸத் உபதேசம் செய்து விட்டு, தான் தூர தேச யாத்திரை செய்ய வேண்டி விரும்புவதாகத் தெரிவித்தார். அப்பொழுது பார்க்க வேண்டுமே, குப்பத்தின் கரை காணாத துக்கத்தை! ஆண் பெண், பெரியோர் சிறியோர் அனைவரும் கதறி அழுது, 'சுவாமிகள் இங்கேயே இருக்க வேண்டும். சுவாமிகள் வெளியேறினால், சில நாளைக்குள் பழைய பிசாசுகளெல்லாம் மறுபடி வந்து எங்களைப் பிடித்துக் கொண்டு விடும். சுவாமிகள் எங்களைக் கைவிடவே கூடாது!' என்று மனப்பூர்வமாகக் கெஞ்சினார்கள்.

"சாம்பசிவத்தின் மனம் அப்போது இருந்த நிலைமையில் அவர்கள் அதிகம் வற்புறுத்த வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. உத்தியோகத்தை ராஜினாமா செய்துவிட்டு, தன் குடும்பத்துக்கும் ஏதோ ஏற்பாடு செய்துவிட்டு, கடலோரத்தில் சாசுவதமாக அமர்ந்து விட்டார்!" என்று சொல்லி, நான் கதையை முடித்துவிட்டு, மூர்த்தியின் முகத்தைப் பார்த்தேன். அவனுடைய கண்கள் கலங்கி யிருந்தன. எனக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன, மூர்த்தி! ஏன் உன் கண்கள் கலங்குகின்றன?" என்று கேட்டேன்.

அவன் ஒரு நீண்ட பெருமூச்செறிந்து, "நீலு! சாவு, துன்பம் இவற்றைக் கண்டு நான் மனங் கலங்காமலிருப்பதுண்டு. ஆனால் இருதய பூர்வமான பக்தி, சிரத்தை, விசுவாசம் முதலிய எளிய உணர்ச்சிகள் என் மனதை உருக்கி விடுகின்றன. ஆயிரம் கானல்களைக் கண்டு ஏமாற்றமடைந்த வழிப்போக்கன், உண்மையான ஜல ஓடையைப் பார்த்து, 'இதுவும் கானல் ஜலமாகத்தான் இருக்கும்!' என்று தீர்மானித்துத் தாகத்தால் தவிப்பது போல் தவிக்காமல், பொய்யை மெய்யாக மாற்றிய செம்படவர்களின் சக்தியை நான் என்னவென்று பாராட்டுவது?—ஆச்சரியம்! அந்த மீன் சாமியார் தன்னை 'வேஷக்காரன்' என்றும், 'காந்தம் ஏற்றப்பட்ட ஊசி' என்றும் பழித்துக் கொண்டதெல்லாம் இப்பொழுதுதான் எனக்கு அர்த்தமாகிறது! ...... சஞ்சலம் நிறைந்த அலைகடலோரத்தில், சஞ்சலமற்ற ஓர் ஆத்மா! கரை காணாத கடலோரத்தில், கரை கண்ட ஒரு முனிவர்!" என்று கூறியவாறு சிந்தனையில் ஆழ்ந்தான்.

நான் அவனுடைய சிந்தனையைக் கலைக்கச் சிறிதும் விரும்பவில்லை.



சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த்] [மொழிபெயர்ப்பு: ரா. விழிநாதன்

இருபத்துநான்காம் அத்தியாயம்
புது வாழ்வு

ஒரு மாதத்துக்கு மேல் ஆகிவிட்டது. பிரயாகையிலிருந்து வெளிவரும் மிகப் பிரசித்தமான தினசரிப் பத்திரிகையொன்றில்,

அறிவிப்பு

அன்புள்ள ரமாவுக்கு,

உன் தாய் தந்தையும், மனைவியும் உன் பிரிவாற்றாமையின் காரணமாக மனம் உடைந்து உடல் நலம் குன்றிப் போயிருக்கிறார்கள். ஆகையால், நீ எங்கே யிருந்தாலும் உடனே வந்து அவர்களைத் தேற்றுவாய் என்று நம்புகிறோம்.

காணவில்லை !

ரமாநாத் என்ற வாலிபனைக் காணவில்லை. கிராப்புத் தலை; மா நிறம்; நல்ல உயரமாக இருப்பான். அவன் இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்துத் தெரிவிப்போருக்கு ஐந்நூறு ரூபாய் வெகுமதி யளிக்கப்படும்.

என்பது போன்ற விளம்பரங்கள் மாறி மாறி வெளிவந்த வண்ணமா யிருந்தன.

ஆனால் இதுவரை எங்கிருந்தும் அவனைப் பற்றிய தகவலே கிடைக்கவில்லை. பத்மா அதே ஏக்கத்திலும் கவலையிலும் மூழ்கித் துரும்பாக இளைத்துப் போய்விட்டாள். அவளுடைய பரிதாப நிலைமையைக் கண்டு தயாளாத பாபுவுக்கே அவள்மீது தயவு பிறந்துவிட்டது. ஆகவே, அவர் தீனதயாள் பாபுவுக்கு, சில தினங்களுக்காவது மாட்டுப் பெண்ணைப் பிறந்தகத்தில் கொண்டு போய் வைத்துக் கொள்ள வேண்டும் என்று விவரமாக ஒரு கடிதம் எழுதினார். தீனதயாள் பாபு அந்தக் கடிதத்தைப் பார்த்ததும், 'பத்மாவை அழைத்துப் போவதற்காக விழுந்தடித்துக் கொண்டு வந்து சேர்ந்தார். ஆனால் பத்மா 'தான் பிறந்தகத்துக்கு வர முடியாது' என்று ஒரேயடியாக மறுதளித்துவிட்டாள்.

தீனதயாள் பாபு அவளுடைய பதிலைக் கேட்டு வியப்புற்று, "இங்கே கிடந்து மடிவானேன்? கொஞ்ச நாட்களுக்காவது நம் ஊரில் வந்து இருக்கக் கூடாதா?" என்று கேட்டார்.

பத்மா மிகவும் கம்பீரமான குரலில், "இப்படி மடியவேண்டும் என்று என் தலையில் எழுதியிருக்கும்பொழுது அதை யாரால்தான் அழிக்க முடியும்? என்னைப் போன்ற துர்ப்பாக்கியவதிக்குச் சாவாவது, வாவாவது? என்னைக் கண்டால்தான் அது பயந்து காத தூரம் ஓடுமே!" என்றாள்.

"எதற்காக இப்படி யெல்லாம் 'அசட்டுப் பிசட்டு' என்று பேசுகிறாய்? வாஸந்தியும் கனினியும்கூட இப்பொழுது ஊருக்கு வந்திருக்கிறார்கள். 'அவர்களுடன் பேசிக் கொண்டு பொழுதைப் போக்கினால் கொஞ்சம் மனக் கவலை மாறுமே!' என்பதற்காகத்தான் கூப்பிடுகிறேன்."

"இங்கே மாமனார் - மாமியாரைத் தனியாக விட்டுவிட்டு என்னால் வரமுடியாது. அழத்தான் வேண்டுமென்று என் தலையில் எழுதியிருக்கும்பொழுது, நான் அழுது தானே ஆகவேண்டும்!"

"என் பத்மா, ஒரேயடியாகத் தலைக்கு மேல் கடன் ஏறிவிட்டது என்று கேள்விப் பட்டேனே! அது நிஜமா? ஆபீஸ் பணத்தை வேறு கையாடி விட்டான் என்று சொல்லுகிறார்களே, அதெல்லாம் உண்மை தானா?"

"அதெல்லாம் இல்லை! உங்களிடம் யாரோ அப்படியெல்லாம் கதை கட்டி விட்டிருக்கிறார்கள்!"

"அப்படியானால் அவன் ஓடிப்போய் விட்ட காரணம் என்ன?"

"எனக்கு ஏதாவது தெரிந்தால்தானே? 'எதற்காக இருக்கும்?' என்று நானும் தான் யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். மூளை தான் குழம்புகிறதே தவிர, சரியான காரணம் விளங்கவேயில்லை."

"இல்லாவிட்டால் அவனுக்கும் தயாநாத பாபுவுக்கும் ஏதாவது மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டதோ?"

"அப்படி ஏற்பட்டிருக்கவும் நியாயம் இல்லை. ஏனென்றால், மாமனாருக் கெதிரில் அவர் தலை நிமிர்ந்து வாய் திறந்து பேசுவதுகூட இல்லை. அவருக்கெதிரில் வெற்றிலைப் பாக்குப் போட்டுக் கொள்ளுவதென்றாலே அவருக்குப் பயம். அப்படியிருக்கும்போது அவர் தன் தகப்பனாரிடம் எங்கே சண்டை போட்டுக் கொண்டிருக்கப் போகிறார்? அவருக்கு ஊர் சுற்றுவது என்றாலே ஓர் அலாதித் திருப்தி. 'வீட்டில் கேட்டால், யாரும் போகவிட மாட்டார்களே என்று எண்ணிக் கேட்காமலேயே போயிருப்பாரோ' என்று எண்ணுகிறேன்."

"அப்படித்தான் இருக்க வேண்டும். சில பேருக்கு ஊர் சுற்றுவதென்றால் ரொம்பப் பிடிக்கும்தான்! இங்கே உனக்கு ஏதாவது கஷ்டம் இருந்தால் என்னிடம் ஒளிக்காமல் சொல்லு. நான் செலவுக்கு ஏதாவது பணம் கிணம் அனுப்பி வைக்கிறேன்" என்றார் தீனதயாள் பாபு.

பத்மா ஒருவிதக் கர்வத்துடன், "எனக்கு இங்கே ஒருவிதமான கஷ்டமும் இல்லை, அப்பா! உங்களுடைய தயவினால் எனக்கு எதற்குமே குறைவில்லை!" என்றாள்.

தயாநாத பாபுவும் ஜாகேசுவரியும் பத்மாவுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் அவள் யார் என்ன சொல்லியும் பிறந்தகத்துக்குப் போகச் சம்மதிக்கவில்லை. அப்பொழுது தயாநாத பாபு ஒருவித எரிச்சலுடன், "இங்கே இருந்து அழுது மடிவதைக் காட்டிலும், கொஞ்ச நாள் அங்கே போய் மனக் கிலேசத்தை மறக்க முயலுவது நல்லதல்லவா? அதற்காகத்தான் நாங்கள் சொல்லுகிறோம்" என்றார்.

அதற்குப் பத்மா, "ஆமாம், அதென்ன, அப்படிப் புதிய உலகமா? இல்லாவிட்டால் நான்தான் மாறிவிடுவேனா? அங்கே போனாலும் இதே அழுகைதானே, எனக்கு! சிரிக்க வேண்டிய நாட்களில் சிரித்தேன்; அழவேண்டிய நாட்களில் அழுதுதானே ஆகவேண்டும்? அவர் ஊரை விட்டு எங்கேயோ ஓடிவிட்ட போதிலும், என் மனதுக்கு அவர் இங்கேயே இருப்பதாகத்தான் தோன்றுகிறது. அவர் நம் கண்களுக் கெதிரே இல்லாவிட்டாலும், இந்த வீட்டின் ஒவ்வொரு வஸ்துவிலும் அவர் குடிகொண்டிருப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. இங்கே யிருந்தாலாவது என் மனதை நான் ஒருவாறு தேற்றிக் கொள்ள முடியும். அங்கே போய் விட்டால், அப்புறம் நான் பைத்தியம் பிடித்துப் பாயைச் சுரண்ட வேண்டியது தான்!" என்றாள்.

தீனதயாள் பாபு, 'பத்மா தன் பிடிவாதத்தை விடவே மாட்டாள்' என்பதை நன்றாக உணர்ந்து கொண்டார். ஆகவே, அவர் அதற்கு மேல் ஒன்றும் பேசாமல் எழுந்து வெளியே வந்து விட்டார்.

அன்று சாயந்திரம் ஊருக்குப் புறப்படும் பொழுது, பத்மாவிடம் சொல்லிக்கொள்ளுவதற்காகச் சென்ற தீனதயாள் பாபு, ஐம்பது ரூபாய்ப் பணத்தை அவளிடம் கொடுத்த வண்ணம், "இந்தா, இதை வைத்துக்கொள். சமய சந்தர்ப்பத்துக்கு உதவும்" என்றார்.

ஆனால் பத்மா தலையை அசைத்து, "எனக்கு இது வேண்டவே வேண்டாம். உங்களுடைய ஆசீர்வாதம் இருந்தாலே போதுமானது. உங்கள் ஆசீர்வாதம்தான் எனக்கு நன்மை பயக்கும்" என்று சொல்லி விட்டாள்.

தீனதயாள் பாபுவின் கண்களில் நீர் மல்கி நின்றது. அவர் அந்தப் பணத்தை அப்படியே கட்டில்மீது வைத்துவிட்டு வெளியே சென்று விட்டார்.

கார்த்திகை மாதம் பிறந்துவிட்டது. ஆகாயத்தில் நீர் அற்ற மேகங்கள் இங்கும் அங்கும் உலாவத் தொடங்கி விட்டன. பத்மா மாடியில் படுத்துக் கொண்டு, ஆகாயத்தை அண்ணாந்து பார்த்த வண்ணம், சின்னஞ் சிறு மேகங்களின் விளையாட்டில் லயித்துத் தன்னை மறந்திருந்தாள். கவலையில் உழலும் பிராணிகளுக்கு ஆறுதல் அளிப்பதற்கு இவற்றைவிட மேலான வஸ்து வேறு எது? அந்தச் சின்னஞ் சிறு மேகங்கள் நிமிஷத்துக் கொரு தரம் நிறம் மாறும்; விதவிதமான உருவங்களைத் தரித்துக் கொள்ளும்; சில சமயம் இன்ப வெறியில் ஒன்றை யொன்று அணைத்துக் கொள்ளும்; அடுத்த கணமே ஒன்றுக் கொன்று பிணங்கிக் கொண்டு விலகியோடி விடும்; சில சமயம் ஒன்றை யொன்று ஓடிப் பிடிக்க முயலும்; முடியாமற் போய் விட்டால் அப்படியே திகைத்துப் போய் ஸ்தம்பித்து நின்று விடும். இந்தக் காட்சியை அனுபவித்துக் கொண்டிருந்த பத்மா, 'எங்கேயாவது ரமாகாந்தும் இம் மாதிரி உட்கார்ந்து கொண்டு, இந்த மேகங் களின் விளையாட்டை ரசித்துக் கொண் டிருப்பானோ?' என்று எண்ணினாள்.

இந்தக் கற்பனையில் மூழ்கியதும் அவளுடைய உள்ளத்தில் ஒரு சொல்லொணாத புல்லரிப்பு ஏற்பட்டது. தோட்டக்காரன் ஒருவன் தன் கைகளால் வைத்து வளர்த்த செடியிடம் காட்டும் மமதையைப் போலும், சின்னஞ் சிறு பாலகன் ஒருவன் தன் சின்னஞ் சிறு கைகளால் கட்டிய மணல் வீட்டின்மீது கொள்ளும் செருக்கைப் போலும், ஆகாயத்தில் உலாவும் அந்த ஜீவன்களின் மீது அவளுக்கு ஒரு தனிக் கவர்ச்சி ஏற்பட்டது. ஏதாவது ஒரு கெடுதல் ஏற்பட்டுவிட்டால், 'நம் அஜாக்கிரதையினால்தான் இப்படி யெல்லாம் ஏற்பட்டு விட்டதோ?' என்று நம் மனம் தன்னைத் தானே கொத்து கொள்ளுகிறதல்லவா! அதைப் போல, பத்மாவின் மனத்திலும் தான் செய்த பாவங்களுக்குத் தான் பகவான் இப்படி யெல்லாம் தண்டனை கொடுக்க ஆரம்பித்து விட்டாரோ?' என்ற பயம் எழுந்தது.

ரமாகாந்துக்கு லஞ்சம் கொடுத்தவர்கள் தங்கள் மனமொப்பியா கொடுத்திருக்கப் போகிறார்கள்? அவன் அவர்களை அதட்டி உருட்டிப் பயமுறுத்தித்தானே பணம் பிடுங்கிக் கொண்டு வந்திருக்க வேண்டும்? அந்தப் பணத்தைப் பார்த்து அவள் மனம் பூரித்துப் போனாளே! அது மட்டுமா? அதைக் கொண்டுதானே அவள் எத்தனையோ அலங்காரச் சாமக்



கிரியைகளையெல்லாம் செய்து கொண்டான்? எத்தனை பேருடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டு அவன் இந்தச் சுகபோகங்களையெல்லாம் அனுபவித்தானோ?

அதே சாமான்களை இப்பொழுது பார்க்கும்பொழுது அவளுடைய மனம் குமுறிற்று. இவைதானே இந்தத் துன்பங்களுக்கெல்லாம் ஆதிகாரணம்? இவற்றின் காரணமாகத்தானே அவளுடைய கணவன் ஊரை விட்டு ஊர் ஓடும்படியாகி விட்டது?

ஆகவே, அவள் மறுநாளே அந்தச் சாமான்களையெல்லாம் ஒன்று சேர்த்தாள். வெல்வெட்டாலான ஸ்லிப்பர், பட்டாலான மேஜோடு, விதவிதமான கொடி வகைகள், அதற்கான நூல்கள், ரிப்பன்கள், பின், சீப்பு, கண்ணாடி ஆகிய எல்லாவற்றையும் கட்டிச் சுருட்டினாள். எல்லாம் சேர்ந்து ஒரு பெரும் குவியலாகக் குவிந்து விட்டன. அவள் அவற்றையெல்லாம் கொண்டு போய்க் கங்கையில் விட்டு விடுவதென்றும், பிறகு தன் வாழ்க்கையைப் புது முறையில் ஆரம்பிப்பது என்றும் முடிவு கட்டிக் கொண்டாள்.



அந்தக் குவியலில் எத்தனையோ அழகிய வஸ்துக்கள் இருந்தன. அவற்றைப் பார்க்கும்பொழுது அவளுக்கு விட்டெறியச் சிறிதும் மனம் வரவில்லை. இருந்தாலும் கொழுந்து விட்டெரியும் மனவேதனை என்னும் தீயை இரண்டொரு சொட்டுத் தண்ணீரால் அணைக்க முடியுமா?

நடுநிசி வரையில் அவள் எங்கேயோ யாத்திரைக்குப் புறப்படுபவள் போல ஒவ்வொரு சாமானாகத் தேடிப் பொறுக்கித் தனியாக எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். பார்க்கப் போனால் அதுவும் ஒரு யாத்திரைதானே? இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு, பொய்யிலிருந்து மெய்க்குப் புறப்படும் யாத்திரை என்று சொல்வதில் தவறு ஒன்றும் இல்லையல்லவா?

கடவுள் கருணையிருந்து, அவர் மறுபடியும் திரும்பி வந்தால் ஒரு தம்பிடிகூட வீண் செலவு செய்யாமல் வாழ்க்கையைச் சிக்கனமாக நடத்துவது என்றும், அவருக்குக் கிடைக்கும் ஊதியத்தைக் காட்டிலும் ஒரு தம்பிடிகூட அதிகமாக வீட்டுக்குள் வர அனுமதிப்பதில்லையென்றும் அவள் தன் மனத்துக்குள் திட்டம் போட்டுக் கொண்டாள். அன்றைய தினத்திலிருந்தே அவள் தன் புது வாழ்க்கையைத் தொடங்கி விடுவது என்றும் முடிவு செய்து கொண்டாள்.

மணி நான்கு அடித்தது. ஜன நடமாட்டமும் ஏற்பட்டது. பத்மா கையில் தன் அலங்காரச் சாமான்கள் நிறைந்த பையை எடுத்துக் கொண்டு கங்கா ஸ்நானத்துக்குப் புறப்பட்டாள். பை மிகவும் கனமாக இருந்தது. அந்தப் பளுவான பையைக் கையில் தொங்க விட்டுக் கொண்டு பத்து அடி எடுத்து வைப்பதுகூட அவளுக்கு மிகவும் சிரமமாயிருந்தது. அடிக்கொரு தரம் அவள் கைமாற்றிக் கொண்டாள். 'யாராவது தன்னைப் பார்த்து விடாமல் இருக்க வேண்டுமே!' என்று உள்ளூற பயம் வேறு. இந்த மாதிரித் தூக்க முடியாத சுமையைத் தூக்கிக் கொண்டு போக வேண்டிய சந்தர்ப்பமே அவ

ளுக்கு அதுவரை ஏற்பட்டதில்லை. அவளுடைய நிலைமையைக் கண்ட வண்டிக்காரர்கள் அவளை வருந்தி வருந்தி அழைத்தனர். ஆனால் அவர்களுடைய அழைப்புக்கு அவள் செவி சாய்க்கவே யில்லை. கைகள் கூடக் கடுத்துவிட்டன. அவள் சிறிதும் மனம் தளராமல் பையைத் தூக்கி முதுகின் மேல் வைத்துக் கொண்டு நடக்கலானாள்.

அவள் கங்கைக் கரையை நெருங்கும் பொழுது நன்றாகப் பொழுது புலர்ந்து விட்டது. அதே சமயம் தனக்கு எதிரே ரத்தன் காரில் வருவதை அவள் பார்த்து விட்டாள். பத்மா அவன் கண்களில் படாமல் தப்ப வேண்டும் என்பதற்காகத் தலையைக் குனிந்து கொண்டு நடக்கலானாள். ஆனால் ரத்தன் வெகு தூரத்திலேயே அவளைப் பார்த்து விட்டான். பத்மாவின் அருகில் வந்ததும் அவன் காரை நிறுத்தி, "எங்கே போகிறாய், பத்மா? இதென்ன, முதுகில் பை?" என்று கேட்டான்.

பத்மா தலை நிமிர்ந்து, "கங்கா ஸ்நானத்துக்காகப் போகிறேன்!" என்றாள்.

"நானும் அதற்காகத்தான் வந்திருந்தேன். ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பிப் போகிறேன். இருந்தாலும் வா, உன்னை உன் வீட்டுக்குக் கொண்டு போய் விட்டு விட்டு நான் போகிறேன். பையைக் காரில் வை!"

"வேண்டாம், ரத்தன்! பை ஒன்றும் கனமாக இல்லை. உனக்கு நேரம் ஆகிவிடும். நீ வீட்டுக்குப் போ! நான் போய்க் கொள்ளுகிறேன்!" என்றாள் பத்மா.

ரத்தன் அவள் சொல்லைக் கேட்காமல் காரிலிருந்து இறங்கி, அவள் கையிலிருந்த பையை வாங்கிக் கொண்டான். பிறகு அதைக் காரில் வைத்துக் கொண்டே, "ஆமாம், இதில் என்னத்தைத் திணித்து வைத்திருக்கிறாய்? ரொம்பக் கனமாயிருக்கிறதே! திறந்து பார்க்கட்டுமா?" என்றான்.

"நீ பார்ப்பதற்கு அதில் ஒன்றும் இல்லை!" என்று பத்மா பதில் அளித்தாள்.

பையில் பூட்டுப் போட்டுப் பூட்டியிருக்கவில்லை. ஆகவே பத்மாவின் சொல்லை மீறி, ரத்தன் அதைத் திறந்து பார்த்து விட்டான். அதைப் பார்த்ததும் அவன் எல்லை மீறிய வியப்புடன், "இவற்றையெல்லாம் எங்கே கொண்டு போகிறாய், பத்மா?" என்று கேட்டான்.

பத்மா காரில் ஏறி உட்கார்ந்து கொண்டே, "இவைகளையெல்லாம் கங்கையில் எறிந்துவிடப் போகிறேன்!" என்று திடமான குரலில் சொன்னாள்.

ரத்தன் வியப்புடன் "கங்கையிலா! இவை என்ன பாவம் செய்தன? உனக்குப் பித்தம்-கித்தம் தலைக்கேறி விட்டதா? போதும் போ! முதலில் இதை வீட்டில் கொண்டுபோய் வைத்துவிட்டு அப்புறம் ஸ்நானத்துக்கு வரலாம், வா!" என்றான்.

பத்மா அழுத்தமான குரலில், "அதெல்லாம் முடியாது, ரத்தன்! இவற்றைக் கங்கையில் கொட்டின பிறகுதான் என் மனதுக்கு நிம்மதி ஏற்படும்" என்றாள்.

"ஏன் இப்படி அசட்டுப் பிசட்டு என்று பேசுகிறாய்?"

"முதலில் காரை விடச் சொல்லு; அப்புறம் சொல்லுகிறேன்."

"அதெல்லாம் முடியாது! முதலில் நீ சொல்லு; அப்புறம் காரை விடச் சொல்லுகிறேன்."

"அது முடியவே முடியாது! நீ காரை ஓட்டச் சொன்னால்தான் சொல்லுவேன்!" என்றாள் பத்மா.

ரத்தன் வேறு வழியின்றிக் காரை ஓட்டச் சொன்னான். கார் கொஞ்சம் நகர்ந்ததும், "இப்பொழுதாவது சொல்லேன்?" என்றான்.

பத்மா, ரத்தனைக் குறை கூறும் பாவனையில், "இந்த விஷயத்தை நீ என்னைக் கேட்காமலேயே தெரிந்து கொண்டிருப்பாய் என்று எண்ணினேன். இதில் கேட்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? இனிமேல் இந்தச் சாமான்கள் இருந்து தான் எனக்கு என்ன உபயோகம்? இவற்றைக் கண்டாலே எனக்கு மனதை என்னவோ செய்கிறது. இவற்றையெல்லாம் போட்டுக் கொள்ளச் சொல்லி அழகு பார்ப்பவரே இல்லாதபொழுது நான் இவற்றை வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறேன்?" என்றாள்.

ரத்தன் ஒரு நீண்ட பெரு மூச்சுவிட்டு விட்டு நடுங்கும் குரலில், "உன் கணவருக்கு ஏன் இப்படி அநீதி இழைக்கிறாய்? அவர் எவ்வளவு ஆசையுடன் இவற்றையெல்லாம் வாங்கிக் கொண்டு வந்திருப்பார், தெரியுமா? நீ இவற்றைப் போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து அவர் அப்படியே அகமகிழ்ந்து போயிருப்பார். இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்தாயா? என்னைக் கேட்டால்,

அவர் உனக்கு வாங்கித் தந்த ஒவ்வொரு வஸ்துவையும் அன்பின் சின்னமாகக் கொள்ள வேண்டும் என்றுகூடச் சொல்லுவேன். நீ இவற்றை யெல்லாம் கங்கையில் விட்டெறிந்து விட்டால், அவருடைய அன்பை அவமதித்ததாக அல்லவா ஆகும்? நீயே யோசித்துப் பார்!'' என்றான்.

பத்மா இவ் வார்த்தைகளைக் கேட்டதும் யோசனையில் ஆழ்ந்தாள். மனம் அலை பாயத் தொடங்கி விட்டது. ஆனால் அவள் ஒரே கணத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''அப்படி நினைக்காதே, ரத்தன்! இந்த வஸ்துக்கள் எல்லாம் என்னுடைய பார்வையிலிருந்து மறையாத வரை எனக்கு மன நிம்மதியே ஏற்படாது. ஆடம்பர வாழ்வில் உள்ள மோகம்தானே என்னை இந்தத் துர்க்கதிக்கு ஆளாக்கியது? இதைப் பாவச் சுமை என்று சொல்லுவதுதான் நியாயமே தவிர, அன்பின் சின்னம் என்று சொல்லுவது கொஞ்சங் கூடப் பொருந்தாது. அன்பு என் உள்ளத்தில் அல்லவா குடிகொண்டிருக்கிறது!'' என்றாள்.

''உன்னுடைய நெஞ்சு கல் நெஞ்சாகத்தா னிருக்க வேண்டும், பத்மா! என்னால் எல்லாம் உன்னைப்போல் இருக்கவே முடியாது.''

''இவற்றையெல்லாம் நான் என்னுடைய கஷ்டத்துக்கு மூலகாரணம் என்றல்லவா எண்ணுகிறேன்!'' என்று மேலே பேச ஆரம்பித்த பத்மா, ஒரு கணம் மௌனம் சாதித்தாள்.

பிறகு அவள் ரத்தனைப் பார்த்து, ''என்ன இருந்தாலும் அவர் செய்ததுதான் அநியாயம், ரத்தன்! கட்டின பெண்டாட்டியிடமே ஒரு புருஷன் ஒளிவு—மறைவு வைத்தால், அவனுக்கு அவளிடம் கொஞ்சங்கூட அன்பு இல்லை என்றுதான் அர்த்தம். அவருடைய ஸ்தானத்தில் நான் இருந்தால், இப்படிச் சந்தி சிரிக்க விட்டுவிட்டு ஓடிப் போயிருக்கவே மாட்டேன். என் மனதில் உள்ள கஷ்டங்களை யெல்லாம் ஒன்றுகூட ஒளிக்காமல் சொல்லி ஆலோசனை கேட்டிருப்பேன்; அதன்படி எப்படியாவது காரியத்தைச் சமாளிக்கவும் முயற்சித்திருப்பேன். புருஷன் பெண்டாட்டி என்று ஆனபிறகு, ஒளிவு—மறைவு எது, ரத்தன்? நீயே சொல்லு!'' என்றாள்.

ரத்தன் புன்னகை பூத்த வண்ணம், ''என் பத்மா, பெண்டாட்டியிடத்தில் தன் மனதில் உள்ளதைத் திறந்து சொல்லும் புருஷர்கள் எத்தனை பேரை நீ பார்த்திருக்கிறாய்? அது கிடக்கட்டும்; உன் மனதிலே கபடு நிறைந்திருக்கும்பொழுது, அவர் மட்டும் ஒளிவு மறைவு வைத்துக் கொள்ளக் கூடாது என்று நீ எதிர்பார்ப்பது எப்படி நியாயமாகும்? நீ அவரிடம் எதையும் ஒளித்து மறைத்ததில்லை என்று உன் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் சொல்லுவாயா?'' என்று கேட்டான்.

பத்மா சிறிது நாணத்துடன், ''அப்படி நான் ஒன்றையும் ஒளித்து வைத்ததாக ஞாபகமில்லை'' என்றாள்.

ரத்தன் கண்டிப்பான குரலில், ''நீ சொல்லுவது அவ்வளவும் பொய்! நான் நம்பவே முடியாது. ஏனென்றால் நீ அவரை நம்பியிருந்தால், அவரும் உன்னை நம்பியிருப்பார்!'' என்றான்.

பத்மாவினால் ரத்தனுடைய குற்றச்சாட்டை ஒரேயடியாக மறுத்துவிட முடியவில்லை. ஏனென்றால், 'ஒரு வேளை அந்தக் கபட நாடகம் தன் தரப்பில்தான் ஆரம்பமாகி இருக்குமோ?' என்ற எண்ணம் அவளுடைய மனதில் எழுந்தது.

அதற்குள் கங்கைக் கரையில் கார் வந்து நின்றது. பத்மா தன் பையை எடுத்துக் கொள்ளுவதற்காகக் கையை நீட்டினாள்.

யாருடைய வேலைக்காரன்?

முன்னொரு காலத்தில் ஒரு ராஜாவுக்குத் திடீரென்று கத்தரிக்காயின் மேல் அளவு கடந்த மோகம் உண்டாயிற்று. ''ஆஹா, அதன் நிறம் எவ்வளவு அழகாயிருக்கிறது! இன்பதற்குத்தான் எவ்வளவு ருசியாயிருக்கிறது!'' என்று ஒரேயடியாக அதைப் புகழ்ந்தார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அவருடைய மந்திரி, ராஜாவுடன் சேர்ந்து கத்தரிக்காயை இன்னும் ஒரு மடங்கு அதிகமாகப் புகழ்ந்தார்,

கொஞ்ச காலத்துக்குப் பிறகு, அந்த ராஜாவுக்குக் கத்தரிக்காயின் மேல் வெறுப்பு உண்டாயிற்று. ''சீச்சீ, இதுவும் ஒரு காயா? இதையும் மனிதன் சாப்பிடுவதா?'' என்றார்.

அப்போது அவருக்குப் பக்கத்திலிருந்த அதே மந்திரி, ராஜாவுடன் சேர்ந்து கத்தரிக்காயை இன்னும் ஒரு மடங்கு அதிகமாகப் பழித்தார்!

உடனே ராஜா அந்த மந்திரியைப் பார்த்து, ''மந்திரி, அன்று நீர் கத்தரிக்காயைப் புகழ்ந்தீர்; இன்று ஏன் வெறுக்கிறீர்?'' என்று கேட்டார்.

அதற்கு அந்த மந்திரி சிரித்துக்கொண்டே, ''மகாராஜா! நான் தங்களுடைய வேலைக்காரனே தவிர, கத்தரிக்காயின் வேலைக்காரன் அல்ல!'' என்றார்.

ரத்தன் அவளுடைய கையைப் பிடித்து கசக்கி, "ஹூம்...... இதை எடுத்துக் கொண்டு போகவிட மாட்டேன்! 'எல்லாம் கங்கையில் மூழ்கி விட்டது' என்று வேண்டுமானால் நீ நினைத்துக் கொள்!" என்றான்.

"அதெப்படி நினைத்துக் கொள்ள முடியும்?"

"என்னை உன் தமக்கையாகப் பாவித்து இந்த மட்டிலாவது என் சொல்லைக் கேட்கக் கூடாதா?"

"தமக்கை என்ற முறையில் நான் உனக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் என்னைத் தடுக்காதே! இந்த அழுக்கை நான் என் உள்ளத்தில் வைத்துக்கொள்ள விரும்பவேயில்லை!" என்றான் பத்மா.

ரத்தன் புருவத்தை நெரித்துக்கொண்டு, "என்ன சொன்னாலும் நீ கேட்க மாட்டாயா?" என்று கேட்டாள்.

பத்மா ஸ்திரமான குரலில், "ஆமாம், என்ன சொன்னாலும் இந்த விஷயத்தில் மட்டும் நான் உன்னுடைய சொல்லைக் கேட்க முடியாது!" என்றான்.

ரத்தன் சலித்துப் போய் முகத்தைத் திருப்பிக்கொண்டு விட்டாள். பத்மா பையை எடுத்துக்கொண்டு வெகு வேகமாகப் படித்துறையை நோக்கி நடந்தான். அடுத்த சில நிமிஷங்களில் அவன் தண்ணீர்க் கரையை அடைந்து கையிலிருந்த பையை வீசி எறிந்து விட்டான். தன் மனோ பலவீனத்தின்மீது தனக்குக் கிடைத்த இந்த வெற்றியைக் கண்டு அவனுடைய வதனத்தில் ஒருவித ஒளி வீசியது. இன்றைக்கு அவனுக்கு ஏற்பட்ட ஆனந்தமும், கர்வமும், அன்றைக்கு அந்த வண்டுக்கலை வாங்கின பொழுதுகூட ஏற்படவில்லை.

அதுவரை அவனையே கவனித்துக்கொண்டிருந்த ரத்தன், "பத்மா!" என்றாள்.

"ஏன்?" என்று கேட்டான் பத்மா.

"உன் நெஞ்சு கல் நெஞ்சடியம்மா!"

"இப்போதாவது இந்தக் கல் நெஞ்சு ஏற்பட்டதனால்தானே நான் என் மனதை வெற்றி கொள்ள முடிந்தது? இன்னும் கொஞ்ச நாட்களுக்கு முன்பே எனக்கு இந்தக் கல் நெஞ்சம் ஏற்பட்டிருந்தால், இந்தக்கதிக்கு ஆளாக நேர்ந்திராதல்லவா?" என்றான் பத்மா. (தொடரும்)

காலக்ஷேபம்

வேண்டியதில்லைதான்!

வக்கீல்:—என்ன அப்பா! நீயானால் படித்தது யில்லை என்று சொல்லுகிறாய்! ஆனால் என்னுடைய கேள்விகளுக்கு மட்டும் ரொம்ப நன்றாகப் பளிச்சுப் பளிச்சென்று பதில் சொல்லுகிறாயே! அது எப்படி?

எதிரி:—அசட்டுக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லப் படிப்பு வேணுங்களா?

★

வேண்டியது என்ன?

ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் பண்ணை விட்டு இறங்கிய பிரயாணி ஒருவர், அங்கிருந்த ஒருவனைக் கூப்பிட்டுத் தம் பெட்டியை எடுத்துக்கொண்டு வருமாறு சொன்னார்.

அவன் பெட்டியைத் தூக்கிப் பார்த்து விட்டுப் பேசாமல் நின்றான்.

"என்னப்பா கேட்கிறே?" என்று கேட்டார் பிரயாணி.

"ஒரு வண்டி வேணுங்க!" என்றான் அவன்.

★

பைசா பெருந்து!

புருஷன்:—எத்தனை நாழி அந்த அடுத்த வீட்டுக்காரியுடன் பேசிக் கொண்டிருக்கிறது? பார்த்தால் பைசா பெருத விஷயமாயிருக்கும்!

மனைவி:—ஆமாம், எல்லாம் உங்களைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தேன்!

ரொம்ப சரி!

நண்பர் (டிராம் வண்டியில் ஏறிக்கொண்டு, நடந்துபோகும் நண்பரைப் பார்த்து):—வாருங்களேன், டிராமில் போய்விடலாம்!

அவர் (நடந்து செல்பவர்):—இல்லை, நீங்கள் போங்கள்! நான் கொஞ்சம் அவசரமாய்ப் போகவேண்டியிருக்கிறது!

★

குணம் தெரிந்தது!

டாக்டர்:—என்னிடம் பதினைந்து நாட்களாக மருந்து சாப்பிடுகிறீர்களே, ஏதாவது குணம் தெரிகிறதா?

நோயாளி:—ஆகா! பேஷாய்த் தெரிகிறது! முன்னே உங்கள் வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தேன்; இப்பொழுது ரிக்ஷாவில் வருகிறேன்!

★

நல்ல சந்தேகம்

தவுல் வித்வான் (குரு):—ரொம்ப நன்னா வாசிக்கிறாய், நீ! இனிமேல் உனக்குச் சிட்சை வேண்டியதில்லை. அவ்வப்போது ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் என்னை வந்து கேளு!

சிஷ்யன்:—சரிங்க! இப்பவே ஒரு சந்தேகங்க! தவுலையும் வாசிச்சிட்டு, அப்படியே குடுமியையும் எப்படி அவிழ்த்து விட்டுக்கிறதுங்க? அதைச் சொல்லித் தாரீங்களா!

என்னே *அவளது எழில்! அவள் பாண்ட்ஸ் உபயோகிக்கிறாள்!

*குஸுமா
கோமள
வதனி...
அழகு
சிங்காரி...



....உங்கள் சருமத்திற்கு நீங்கள் விரும்புவது இயற்கைத் தைலங்கள்தான் இல்லையா? வதனத்தை மாசற்று புதுமை காந்தியுடன் விளங்கச் செய்ய, நறுமணக்கமழும் மிருதுவான பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமையும் வானிஷிங் க்ரீமையும் பரீட்சியுங்கள்—எங்குமே, கவர்ச்சி வாய்ந்த நங்கையர்கள் பாண்ட்ஸையே உபயோகிக்கின்றனர்.

பாண்ட்ஸ் தினசரிமுறை



பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம்: தினம் இரண்டு வேளை விரல் நுனிகளால் கோல்ட் க்ரீம் மெதுவாகத் தடவி, முகத்தை செம்மையாகச் சுத்தம் செய்யுங்கள். பாண்ட்ஸ் டிஷ்யுவால் துடைத்துக் கொள்ளவும்.




பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்: பின்பு வானிஷிங் க்ரீம் தடவுங்கள். அது சருமத்தினுள் மறைகிறது-சருமத்திற்கு பாதுகாப்பு அளிக்கிறது.



பாண்ட்ஸ் பௌடர்: பின்னர் வேண்டுமானால் கொஞ்சம் பௌடரும் தடவிக் கொள்ளுங்கள். முகம் புதிதாய்ப்பூத்த மலர்போல காந்தியுடன் விளங்கும்.

பாண்ட்ஸ் க்ரீம்ஸ்

வியாபார விவரங்களுக்கு:
எல். டி. ஸெய்மூர் & கோ. (இந்தியா) லிட். பம்பாய்-கல்கத்தா-கராச்சி-சென்னை.



கர்ப்பச் சேதத்துக்குப்

பிறகும், பிரஸவத்துக்குப் பிறகும், கடுத்த ஜுரங்களுக்குப் பிறகும் தலைமயிர் அதிகமாகக் கொட்டுவதுண்டு. சாதாரண ஜுரங்களுக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. அதிர்ச்சி ஸஹிதமான ஜுரமாகுலும் மயிர் அபரிமிதமாகக் கொட்டும். சில சமயம் விடாமல் உதிர்ந்து கொண்டேயிருக்கும். எந்தக் காரணத்தால் மயிர் உதிர்ந்தபோதிலும் கேசவர்த்தினியைக் கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள்.

உதிர்ந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலைப் பெறுங்கள். கேசவர்த்தினியின் உதவியால் அற்ப கேசத்தை அபரிமித கேசமாக்குங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12.

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை,

ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்

சமயத்தில் வேண்டுவது பலசாலியான மனிதரே!



ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானங்கள், ஆந்திர ஜில்லாக்கள் தமிழ் நாடு களுக்கு ஏஜண்டுகள்:

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பேர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை

சண்பகப் பூ

வேங்கடலட்சுமி

இளையாளாய் வாழ்க்கைப் பட்டால் தான் என்ன? அதற்காக உணர்ச்சியேயில்லாமலா போய்விடும்? நானும் எல்லாப் பெண்களையும் போல்தானே? எல்லோரையும் போல் நகையென்றும், புடவையென்றும், பூவென்றும் அனுபவிக்க வேண்டுமென்று எனக்கும் ஆவல் இராதா? — இல்லை, அப்படித்தான் என் கணவருக்கு அதிகமான வயதாகி விட்டதா, இப்படி எல்லாவற்றையும் வெறுத்து ஒதுக்கும்படி? அதுவுமில்லையே! பெயரளவில்தான் நான் இளையாளே தவிர என் கணவருக்கு இன்னும் முப்பது வயதுகூட ஆகவில்லை! ஆனால் ஒன்றுமட்டும் நான் நிச்சயமாக அறிந்து கொண்டிருந்தேன். அவர் தம் மூத்த மனைவி தங்கத்தின் மீது உயிருக்குமேல் ஆசை வைத்திருந்தாராம்! கல்யாணமான ஆறுமாதத்துக்கெல்லாம் அவள் ஏதோ தீரா வியாதியில் படுத்து விட்டாளாம். மனைவிக்கு வைத்தியம் செய்வதற்காக அவர் இருந்த சொத்துக்களையெல்லாம் விற்று விட்டுத் தன் வேலையைக்கூட ராஜீனாமாச் செய்து விட்டுக் கோயமுத்தூருக்குப் பக்கத்திலிருந்த ஓர் ஊரில் போயிருந்தாராம். அங்கேயே ஏதோ ஓர் ஆஸ்பத்திரியில் தங்கம் இறந்துபோய் விட்டாளாம். அப்புறம் ஐந்தாறு வருஷங்கள் எங்கும் நிலைக்காமல் ஊருராய் அலைந்துகொண்டிருந்துவிட்டு, கடைசியில் தன் கிழத் தாயாரின் தொந்தரவு சகிக்க முடியாமல் என்னைக் கல்யாணம் செய்து கொண்டாராம்.

சீமந்தத்துக்காக வந்திருந்த அவருடைய அத்தை மகள் அலமு இந்த விவரங்களையெல்லாம் எனக்குச் சொன்னாள். அவள் எதற்காக இதையெல்லாம் என்னிடம் சொல்ல வேணும்? ஒரு வேளை என் கணவர் தன்னைக் கலியாணம் செய்துகொள்ளவில்லையென்பதாயிருக்கலாம்; பொறாமை தான் அவளுக்கு எடுத்ததாச்சே!

விஷயத்தைச் சொல்லி விடுகிறேன்; இப்படிச் சுற்றி வளைத்துப் பேசினால் விளங்குமா?

• • •

விஷயம் என்னமோ அற்பமானது தான்; அதற்காக அவரும் அப்படி 'வள்' என்று விழுந்திருக்க வேண்டாம்; நானும் அதைப் பெரிதாய் எடுத்துக் கொண்டு விண்டு விரிந்திருக்க வேண்டாம்!

சீமந்த முகூர்த்தமான மறுநாள்; வந்திருந்தவர்களெல்லாம் போய்விட்டார்கள். அலமுவை ரயிலேற்றிவிட அவர் போயிருந்தார். எனக்குப் பிறந்தகத்தில் ஒருவருமே கிடையாது. ஆகையால் ஒருவரும் வரவில்லை. வீட்டில் நானும் என் மாமியாரும் மட்டும்தான் இருந்தோம்.

“சாரதா!” என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வந்த என் மாமியார், “இதோ, பார்! ஜோலார்குடியகத்து மாமி கொடுத்தனுப்பியிருக்கிறாள்! அவாத்து மாத்தில் பூத்ததாம்!” என்று சொல்லிக் கொண்டே, கையிலிருந்த கூடையைக் காண்பித்தாள்.

அந்தக் கூடை நிறைய அன்றே மலர்ந்த புதிய சண்பகப் பூக்கள் நிரம்பியிருந்தன.

எனக்கு எப்பொழுதுமே புஷ்பமென்றால் ரொம்பப் பிடிக்கும்; அதிலும் சண்பகப் பூவென்றால் கேட்கவே வேண்டாம்.

ஆவலோடு அந்தக் கூடையைக் கையில் வாங்கிக் கொண்டு, அதிலிருந்து ஒரு பூவையெடுத்து முகர்ந்து பார்த்துவிட்டுத் தலையில் சூட்டிக் கொண்டேன்.

என் மாமியார் என்னைப் பார்த்து, “சாரதா! இன்றைக்கு வெள்ளிக்கிழமை; தலை பின்னிச் சண்பகப் பூவை இதமாக வைத்துத் தைத்துவிடுகிறேன். பூச்சூட்டலுக்காக வாங்கின அந்தப் புதுப் புடவையையும் எடுத்துக் கட்டிக் கொள் — எனக்கு உன்னை அந்தக் கோலத்தில் பார்க்கவேணும் போல் ஆசையாயிருக்கு!” என்றாள்.

நான் தயங்கினேன். “அவர் கோபித்துக் கொள்ளுவாரோ, என்னமோ! பூவைக் கண்டாலே அவருக்குப் பிடிக்காதே!” என்றேன்.

“அவன் கிடக்கிறான்டி, பின்னைத்தாய்ச்சிப் பெண்! ஆசைப்பட்டதைச் செய்து கொள்ளாதோ? அதெல்லாம் ஒரு காலைக்கு ஒன்றும் சொல்ல மாட்டான்!” என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்ற என் மாமியார், ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் கையில் சாக்கடிப் பெட்டியுடனும், ஜடைக் குச்சு, சீப்பு முதலியவைகளுடனும் திரும்பி வந்தாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் எனக்கு அழகாகத் தலை பின்னிச் சண்பகப் பூவும்

தைத்து விட்டுவிட்டாள். புதுப் புடவையையும் எடுத்துக் கட்டிக் கொண்டேன். நெற்றிக்கு இட்டுக்கொண்டு மாமியாரை நமஸ்கரித்தேன்.

சந்தோஷத்தினால் கண்ணீர் ததும்ப, "ஆண் குழந்தையாகப் பெற்றுக் கொண்டு நன்றாயிரு!" என்று அவள் என்னை ஆசீர்வதித்தாள்.

அலமுவை ரயிலேற்றி விடப்போன என் கணவர் ஐந்து மணி சுமாருக்குத் திரும்பி வந்தார். அவருக்குக் காப்பியையும் பலகாரத்தையும் எடுத்துக் கொண்டு மாடிக்குப் போனேன். கையில் கொண்டுபோனவைகளை யெல்லாம் அவர் அருகிலிருந்த மேஜையின்மீது வைத்து விட்டு நின்றேன்.



என்னை ஒரு நிமிஷம் அவர் ஏற இறங்கப் பார்த்தார். பிறகு சாந்தமாக, "சாரதா! இதெல்லாம் என்ன அலங்காரம்? ஏதாவது நாட்டியம் கீட்டியம் ஆடப்போகிறாயா, என்ன?" என்றார்.

ஒரு நிமிஷம் என்ன பதில் சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை. துக்கமும் ரோசமும் பொங்கி வந்து என்னுடைய நெஞ்சை அடைத்துக் கொண்டது. சற்றுப் பொறுத்து, "எதற்காக இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? என்னவோ அம்மா சொன்னாள், அதற்காகப் பண்ணிக் கொண்டேன்! உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் இதோ போய் எல்லாவற்றையும் கழற்றி எறிந்து விடுகிறேன்!" என்று கோபத்தோடு சொல்லிவிட்டுப் போகத் திரும்பினேன்.

"சாரதா!" என்றார் அவர். குரல் ஒரு தினுசாக இருந்தது.

திரும்பிப் பார்த்தேன். அவர் எழுந்து நின்றுகொண்டிருந்தார். அவர் கண்களில் கனல் பறந்தது. நான் நடுங்கிப் போய் விட்டேன்.

"சாரதா! இந்தச் சண்பகப்பூ உனக்கு யார் கொடுத்தார்கள்?" என்று சீறினார்.

"வேளக்குடியகத்து மாமி கொடுத்தனுப்பினதாக உங்கள் அம்மா சொன்னாள்...!" என்று பயத்தினால் பாதி வார்த்தைகளை விழுங்கிவிட்டுப் பதில் சொன்னேன்.

"போ! போய், முதலில் அதையெல்லாம் பிய்த்து எறிந்து விட்டு வா, போ!

என் எதிரில் நிற்காதே!'' என்று ஆவேசத்துடன் கைகளை ஆட்டியபடி அவர் கூவினார்.

நான் திகிலினால் பிரமை தட்டி நின்று விட்டேன். என் கண்கள் கலங்கின. குமுறிக் கொண்டு வந்த அழுகையை அடக்க முடியாமல் விம்மியபடியே, வேகமாகப் படிகளில் இறங்கிப் போய்க் காமரா உள்ளில் படுத்துவிட்டேன்.

எவ்வளவு நேரம் நான் அழுதுகொண்டிருந்தேனோ, எனக்குத் தெரியாது. கோயிலுக்குப் போயிருந்த என் மாமியார், ''சாரதா! எங்கேயிருக்கிறாய்?—இதென்ன, வீடெல்லாம் இருண்டு கிடக்கிறதே! விளக்கேற்ற வில்லையா?'' என்று கேட்டபடியே உள்ளே வந்த பொழுதுதான் நான் எழுந்து வந்தேன்.

கூடத்தில் குத்து விளக்கை ஏற்றி வைத்துவிட்டுத் திரும்பும் பொழுது, என் முகத்தைக் கவனித்த மாமியார், ''சாரதா! என்ன உனக்கு? என்னவோ போலிருக்கிறாயே!—உடம்பு சரியில்லையா, அம்மா?'' என்று கேட்டாள்.

அன்புடன் அவள் கேட்ட இந்த வார்த்தை என்னுடைய நெஞ்சில் குமுறிய துக்கத்தை மீண்டும் கிளப்பிவிட்டது. எப்பொழுதோ இறந்து போன என் தாயாரைக்கூட அப்பொழுது நான் நினைத்துக் கொண்டேன்!

அவ்வளவுதான்; அப்படியே தூணில் சாய்ந்து கொண்டு விம்மிவிம்மி அழ ஆரம்பித்து விட்டேன்.

சிறிது நேரம் கழிந்த பிறகே என்னால் பேச முடிந்தது. கொஞ்சம் கொஞ்சமாக என்னிடமிருந்து விஷயத்தை யெல்லாம் அறிந்து கொண்ட மாமியார். ''அப்பாவை அப்படியே உரித்துக் கொண்டு வந்திருக்கிறான், குணத்துக்கு! சாகிற வரையிலும் என்னை அவர் ஆட்டி வைத்தது கொஞ்சமா? கிடக்கிறது, போ! அதற்காக நீ அழுதழுது பச்சை உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே! அவனுடைய சுபாவம் அது, விட்டுத் தள்ளு!'' என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

சற்றுப் பொறுத்து அவர் வெளியே வந்த பொழுது, நான் கூடத்தில் உட்கார்ந்தபடியே என் தலைப் பின்னலை அவிழ்த்து விட்டுச் சண்பக இதழ்களை யெல்லாம் ஒரு பக்கமாகக் குவித்து வைத்துக் கொண்டிருந்தேன். தலையிலிருந்த ராக்கடியையும் ஜடைக் குச்சையும் எடுத்து மாமியார் கையில் கொடுத்தேன். ஒன்றுமே பேசாமல் நான் கொடுத்ததை வாங்கிப் பெட்டியில் கொண்டு போய் வைத்துவிட்டு, விளக்கருகில் வந்து ஜபம் செய்ய உட்கார்ந்து விட்டாள் அவள்.

அன்றிரவு நானும் என் மாமியாரும் சாப்பிட வில்லை. என் கணவர் உள்ளே சாப்பிட வந்தபொழுது, நான் எழுந்து போய் இலை போட்டு மௌனமாகவே பரிமாறினேன்.

இரண்டு தரம் ஏதோ பேச விரும்புவது போல் அவர் என்னை ஏறெடுத்துப் பார்த்தார். ஆனால் ஒன்றுமே பேசவில்லை; அவருடைய மனச் சாட்சியே அவரை உறுத்தியது போலும்!

நானும் பேசவில்லை. எனக்கு மட்டுமென்ன, சுயமரியாதை யில்லையா?

2

அன்றிரவு நான் தூங்கும்போது யாரோ என்னைத் தொட்டது போலிருந்தது. திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன்.

அறையில் விடிவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதன் அரைகுறையான வெளிச்சத்தில் என் கணவர் அருகே உட்கார்ந்திருந்ததைக் கண்டேன். அவர் கண்களில் நீர் ததும்பிக் கொண்டிருந்தது.

''சாரதா!'' என்றார் அவர்.

நான் ஒன்றுமே பேசவில்லை; கண்களை மூடிக்கொண்டேன்.

''சாரதா! நான் ஒரு காட்டுமிராண்டியென்றும் முரடனென்றும் நீ இப்போது எண்ணுகிறாயில்லையா?'' என்று கேட்டார்.

அதற்கும் நான் பேசாமலிருந்தேன். ''ஆமாம், அப்படித்தான் எண்ணுகிறேன்!'' என்று எனக்குச் சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் என்னை அடக்கிக் கொண்டேன்.

''சாரதா, இதோ பார்! நான் சொல்லுவதைக் கேள்; அப்புறம் என்னைப் பற்றி நீ எப்படி வேண்டுமானாலும் எண்ணிக் கொள்!'' என்றார்.

அவருடைய குரலில் நிரம்பி யிருந்த உணர்ச்சி என்னை அதிசயிக்கச் செய்தது. இன்னும் என் மனதிலிருந்த ரோசம் குறையவில்லை யாயினும், அவர் என்ன சொல்லுகிறார் என்பதைக் கேட்க வேண்டுமென்ற ஆவல் எனக்கு உண்டாயிற்று. ஆகவே, மீண்டும் கண்களைத் திறந்தேன்.

"சாரதா!" என்று ஆரம்பித்து, மிகவும் தாழ்ந்த குரலில் அவர் வெறும் வெளியைப் பார்த்தபடியே பேசிக் கொண்டு போனார்:

* * *

ஏழு வருஷங்களுக்கு முன்னால் நடந்த விஷயம் அது. அப்பொழுது நானும் அவளும் செருக்கொண்டா என்னும் ஊரில் இருந்தோம். அது தெலுங்கு ஜில்லாவைச் சேர்ந்தது. வருஷத்தில் ஆறு மாதம் வெய்யில் கொளுத்திவிடும். ஜலக் கஷ்டம் சொல்லி முடியாது. அங்கிருந்துதான் தங்கத்துக்கு வியாதி ஆரம்பித்தது. எனக்கு அப்பொழுது சொற்ப சம்பளந்தான். தெலுங்கு ஜில்லாக்களில் ஒரு குக் கிராமத்துப் போஸ்ட் மாஸ்டருக்கு என்னதான் சம்பளம் இருக்கும்? ஆனால் தங்கம் கெட்டிக்காரி; அவளுடைய சாமர்த்தியத்தினால் எப்படியோ கடன் வாங்காமல் காலம் தள்ளி வந்தோம்.

எங்கள் வீட்டுச் சொந்தக்காரன் ஒரு பணக்கார ரெட்டி; அவனுடைய மகள் ஒருத்தி, அவளும் தங்கத்தின் வயதுதான்,— கல்யாணமாகாமல் வீட்டில் இருந்தாள். அவள் பெயர் அம்மாயி. அந்தப் பெண் தங்கத்துக்குச் சிநேகமானாள். பக்கத்து வீடானதால் நான் ஆபீசுக்குப் போனதும் இங்கே வந்து தங்கத்துடன் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் போவாள்.

அவர்கள் வீட்டைச் சுற்றிப் பெரிய தோட்டம். கூடை கூடையாகப் பூ பூக்கும். தங்கத்துக்கு நிறையக் கொண்டு வந்து கொடுப்பாள். பூ என்றால் தங்கத்துக்குப் பிராணன். நிறையத் தொடுத்துத் தலையில் வைத்துக் கொள்வாள். படங்களுக்கும் தொடுத்துச் சாத்துவாள். எத்தனையோ தரம் நான் அவளை இந்தமாதிரி ஒரு சுமைப் பூவைத் தலையில் வைத்துக் கொள்ளுவதைக் குறித்துக் கேலி செய்திருக்கிறேன். அதற்கு அவள் ஒன்றுமே பதில் சொல்லாமல் சிரித்துக் கொண்டே போய் விடுவாள். ஆனால் என்னுடைய கேலிக்காக அஞ்சி அவள் பூ வைத்துக் கொள்ளுவதை மட்டும் குறைத்துக் கொள்ளவில்லை!

ஒரு தரம், "என்ன தங்கம்! வீட்டுக்குள் நுழையும்பொழுதே உன் தலையிலிருக்கும் பூவின் மணம் எனக்குத் தலைவலியை உண்டாக்கி விடுகிறதே! நீ எப்படி தினம் தினம் இவ்வளவு பூவைத் தலையில் வைத்துக் கொள்ளுகிறாய்?" என்று வேடிக்கையாக அவளைக் கேட்டேன்.

உடனே அவள், "பெண்ணாய்ப் பிறந்தால்லவா உங்களுக்கும் புஷ்பம் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை தோன்றும்? — ஆனாலும் பாருங்களேன்! நீங்கள் என்னவோ மணம் மணமென்று சொல்லுகிறீர்களே தவிர, எனக்கு என்னவோ இந்த ஊர்ப் பூவில் ஒன்றும் மணமிருப்பதாகவே தெரியவில்லை. நம்ம ஊர்ச் சிவன் கோவில் நந்தவனத்தில் சண்பக மரமிருக்கிறதே, அதிலே எப்பொழுதாவது அபூர்வமாக நாலு அரும்பு கட்டிப் பூக்கும். அப்பா! அந்த மணத்துக்கு ஈடே கிடையாது! இந்த ஊரில் அந்தமாதிரிச் சண்பகப்பூ எங்கே கிடைக்கும்?" என்றாள்.

"ஏன், உன் சிநேகிதி வீட்டுத் தோட்டத்தில் சண்பக மரம் இல்லையோ?" என்று கேட்டேன்.

"இல்லையாம்! இந்த ஊரிலேயே சண்பக மரம் கிடையாதென்று அவள் சொல்லுகிறாள்!" என்றாள் தங்கம்.

அன்றைய தினம் ஆபீசுக்குப் போனபொழுது போஸ்ட்மேன் ஏதோ கேட்க வந்தான். அவனிடம் பேசிக் கொண்டிருக்கையில், அந்த ஊரில் சண்பகப் பூ கிடைக்குமாவென்று கேட்டேன். அவன் எங்கோ எட்டு மைலுக்கப்பாலுள்ள ஒரு வெள்ளைக்காரனுடைய பங்களாத் தோட்டத்தில் ஒரு மரம் இருப்பதாகவும், அந்தப் பங்களாவின் தோட்டக்காரனைத் தனக்குத் தெரியுமாகையால், அவனைக் கேட்டு ஐந்தாறு பூக்களாவது வாங்கி வருவதாகவும் சொன்னான்.

அப்புறம் நானும் அதை மறந்து விட்டேன்; தங்கமும் அதைப் பற்றிப் பிறகு ஒன்றும் கேட்கவில்லை.

ஒரு மாதம் ஓடிவிட்டது. செருக்கொண்டா வெய்யில் அக்கினியாய்க் கொளுத்த ஆரம்பித்துவிட்டது. அந்த வெய்யில் தாங்காமல் தங்கம் அடிக்கடி மயக்கமாய்ப் படுத்து விடுவாள். முதலில் நானும் அதைப் பெரிதாய் எடுத்துக் கொள்ளவில்லை. தங்கத்துக்கு ஏற்கெனவே துர்ப்பலமான சரீரம். இந்த லட்சணத்தில் அடிக்கடி அவளுக்கு ஜுரம் வர ஆரம்பித்தது. அங்கே இருந்த டாக்டர் ஒருவர் அவளுக்கு இரண்டு மாதம் வைத்தியம் பண்ணினார். அதன் பலனாகவோ என்னவோ, தங்கம் ஒரே படுக்கையாகி விட்டாள்!

கடைசியில், வியாதி தனக்குப் பிடிபடவில்லையென்றும் சீக்கிரமே ஏதாவது

பெரிய ஆஸ்பத்திரிக்கு அழைத்துக் கொண்டு போய் வைத்தியம் பண்ணும்படியும் சொல்லி, அந்த டாக்டர் கையை விரித்து விட்டார்!

எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. எப்படியோ தங்கம் பிழைத்தால் போதுமென்ற எண்ணத்துடன் இருந்த பணத்தையெல்லாம் திரட்டி யெடுத்துக் கொண்டு, வேலையையும் ராஜிநாமாச் செய்து விட்டு, அவளைக் கோயமுத்தூருக்கு அழைத்துப் போகச் சித்தமானேன்.

புறப்படுவதற்கு முதல் நாள் ராத்திரி எட்டு மணிக்கு மேலிருக்கும். அன்று தங்கத்துக்கு நல்ல ஜுரம். 'ஐயோ! அப்பா!' என்று அலறிக் கொண்டிருந்தாள். நான் பக்கத்தில் உட்கார்ந்து விசிறிக் கொண்டிருந்தேன்.

"சாமி! சாமி!" என்று யாரோ கதவைத் தட்டிக் கூப்பிடும் சத்தம் கேட்டது. எழுந்து போய்க் கதவைத் திறந்தேன். கையில் ஒரு சிறிய கூடையுடன் நின்றிருந்தான் போஸ்ட்மேன்.

"இந்தாங்க சாமி, சண்பகப் பூ! நானிக்கு அம்மா ஊருக்குப் போறாங்களேன்னு இன்னிக்கே ஓட்ட ஓட்டமாய்ப் போய்க் கொணர்ந்தேன்!" என்றான் அவன்.

கூடையைக் கையில் வாங்கிக் கொண்டு அவனை அனுப்பி விட்டு உள்ளே வந்தேன்.

தங்கம் கண்ணை மூடிப் படுத்துக் கொண்டிருந்தாள்

"தங்கம்! இதோ பார், சண்பகப் பூ! போஸ்ட்மேன் கொண்டு வந்து கொடுத்தான்!" என்றேன்.

கண்ணைத் திறந்தவள் ஆவலோடு ஒரு பூவை யெடுத்து முகர்ந்து பார்த்து விட்டு அப்படியே தலையில் செருகிக் கொண்டாள்.

"வேண்டாம்; அப்புறம் தலையை வலிக்கப் போகிறது!" என்று நான் தடுத்தேன்.

"பரவாயில்லை, போங்கள்! எத்தனை நாளாக இந்தச் சண்பகப் பூவுக்கு ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன்? இந்த அத்துவானக் காட்டில் இவ்வளவு நாள் ஒரு அரும்புகூடக் கிடைக்கவில்லையே! மிகுதிப் பூவை யெல்லாம் எடுத்து ஈரத் துணியில் சுற்றி வையுங்கள். நாளைக்குக் காலையிலே தொடுத்து வைத்துக் கொள்ளுகிறேன்!" என்றாள்.

சற்றுப் பொறுத்து மீண்டும், "ஆனாலும் நம்ம ஊர்ச் சிவன் கோவில் சண்பகப் பூவின் வாசனை வராது!" என்று சொல்லி விட்டுக் கண்ணை மூடிக் கொண்டாள்.

மறுநாள் ஊருக்குப் புறப்படும்போது கூடப் பக்கத்து வீட்டு அம்மாவியைக் கூப்பிட்டு, அந்தச் சண்பகப் பூவை யெல்லாம் தொடுத்துத் தலையில் சூட்டிக் கொண்டுதான், அவள் வண்டியில் ஏறிப் படுத்துக் கொண்டாள்!

அப்புறம் ஐந்தாறு மாதம் அவளுடைய சரீரம் எவ்வளவோ வாதைப் பட்டது. பெரிய ஆஸ்பத்திரியில் வைத்துக் கொண்டு எவ்வளவோ வைத்தியம் பண்ணினேன். இனிமேல் பிழைக்க மாட்டாளென்று தெரிந்து விட்டது. ஆகவே, ஊருக்குப் போய் விடுவதென்ற முடிவுக்கு வந்தோம். கிராமத்தில் எனக்கு ஒரு பழைய வீடு உண்டு. அங்கே கொண்டு போனேன். எழெட்டு நாள் யமனுடன் போராடினாள். அவள் பட்ட கஷ்டத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை.

பிராணன் போகும் சமயம். துக்கத்தைத் தாங்க முடியாமல், "தங்கம்! உனக்கு என்ன வேண்டும்? ஏதன் மீதாவது ஆசையிருந்தால் சொல்" என்றேன் அழுதபடி.

"ஒன்றும் வேண்டாம், சிவன் கோவில் மாத்தி விருந்து இரண்டு சண்பகப் பூ மட்டும் வேணும்!" என்று சொன்னவள், அப்படியே கண்ணையும் மூடிவிட்டாள். அப்புறம் திறக்கவே யில்லை.

சண்பகப் பூவைத் தருவித்து அதை வைத்துத்தான் அவளைக் கொண்டு போனார்கள்.


* * *

சீதா! இப்பொழுது தெரிந்ததா, எனக்கு அவ்வளவு உணர்ச்சி பொங்கிய காரணம்? உன் தலையில் சண்பகப் பூவைக் கண்டதும் என் மனம் எங்கேயோ சென்று விட்டது!—ஆனால், அதற்காக நான் உன்னிடம் ஆத்திரப்பட்டது பிசகுதான்! என்னை மன்னித்து விடு!" என்றார் அவர்.

பிறகு சின்னக் குழந்தையைப் போல் அவர் விம்மி விம்மி யழலானார். எனக்கும் அழுகை வந்துவிட்டது. நான் எழுந்து உட்கார்ந்து, "இல்லை யில்லை; தப்பு என் பேரில்தான்! அந்தச் சண்பகப் பூ உங்கள் மனதில் இவ்வளவு பெரிய புயலைக் கிளப்பி விடுமென்று தெரிந்திருந்தால், அதை நான் வைத்துக்கொண்டே இருக்க மாட்டேன்!" என்றேன்.

அவர் ஒன்றுமே பேசாமல் மெதுவாக என் முகத்தைத் தமது தோளில் சாய்த்துக் கொண்டார். மனச் சாந்தியுடன் கண்களை மூடிக்கொண்டேன் நான்.

பேபி கமலாவின் அழகுபடுத்திக்கொள்ளும் முறை லக்ஸ் டாய்லட் சோப்...



கட்டழகி கமலாவின் அப்பழுக்கற்ற இனிதான வதனமே அவரது கவர்ச்சிக்கு முக்கிய காரணம். நீடித்து நிற்கும் சரும எழிலின் ரகசியம் 'தவறாமல் ஒரு அழகுபடுத்திக் கொள்ளும் முறையை கையாள்வதுதான் என்பது அவருக்குத் தெரியும். ஆகையால், சரும பாதுகாப்பில் தனி சிரத்தை யெடுத்துக் கொள்கிறார். லக்ஸ் டாய்லட் சோப்பின் தாராளமாயுண்டாகும் நறுமணங்கொண்ட நுரை அவர் சருமத்தை குளுமையாகவும், மிருதுவாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்கிறது. நீங்களும் ஏன் கமலாவைப் போல் இந்த வெண்மையான குற்றமற்ற சோப்பைக்கொண்டு உங்கள் வதன எழிலை காப்பாற்றக்கூடாது?

ஏ.வி.எம். பிரொடக்ஷன்ஸாரின் "நாம் இருவர்" என்ற புதுப் படத்தில் பேபி கமலாவை பார்க்கலாம். இந்த சமூகப் படத்தில் அவரது சிறந்த நடிப்பு அவருக்கு தனிப் பெருமையளிக்கும்.



லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களுக்கு அழகுதரும் சோப்

LTS. 162-23-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED



How to make a LITTLE food go a LONG way



தேசத்தில் ஏற்பட்டிருக்கும் சிக்கலான உணவு நெருக்கடியினால், பங்கீடு முறை மிகக் குறைந்த அளவில் கையாளப்பட்டு வருகிறது. மிகக் குறைவாக தயாரித்த உணவை நீண்ட காலம் நாளச் செய்ய வேண்டியது ஒவ்வொரு இல்லாளின் கடமையாகும்.

இதை உத்தேசித்து-உங்களது உணவைக் கூடியவரை மிக்க ருசிகரமாகத் தயார் செய்ய வேண்டும். ஸ்வஸ்திக் "கோவலின்" பிராண்டு வனஸ்பதியில் தயார் செய்த பூரி, சப்பாத்தி, பஜ்ஜி ஆகியவைகள் உண்மையி லேயே மிக்க ருசிகரமாயுள்ளன.

சிறந்த தாவரப் பொருள்களிலிருந்து உயர்ந்த ஜீவிய சக்தி அளிக்கக்கூடிய வகையில்-தர மாக மிகவும் சுகாதார முறையில் டின்களில் பாக் செய்யப்பட்டு "கோவலின்" பிராண்டு வனஸ்பதி உங்களுக்கு அளிக்கப்படுகிறது.

மற்றும் இதர ஸ்வஸ்திக் தயாரிப்புகள்: வாசலீன் காஸ்டர் ஆயில், காந்தி சோப்பு, இதர ஸ்நான சோப்புகள், ஸ்வஸ்திக் ஷேவிங் ஸ்டிக், வாஷிங் சோப்பு முதலியவை.

SWASTIK VANASPATI

UNMATCHED FOR QUALITY

SWASTIK OIL MILLS LIMITED, BOMBAY.

SOM-4 SHILPI

BE INDIAN - - - - - - - - - - -BUY INDIAN!

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

கல்கி



KALKI அக்டோபர் 5, 1947 4 அணா

குழந்தைக்கு முக்கியமானது **பேபி கிரைப்** குழந்தைக்கு ஆரோக்கியமளிப்பது

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தையும் தரும் சிறந்த திராவகம்.

அயோடிசால்

மிகச் சிறந்த ரத்த சுத்தி மருந்து

இது சிரேகத்தில் உஷ்ணம் அதிகரித்து அதனால் ஏற்படும் ரோகங்களை குணப்படுத்தி, சிரேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கும். ரத்தத்தை சுத்தி செய்து ரத்த விருத்தியையும் உண்டாக்கும்.

சைபால்

முகப்பரு, சேத்துப் புண் சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

ஏஜண்டுகள் :—ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்—பெஜவாடா, பேர்ஹாம்பூர் & சிகந்தராபாத்; கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி.

இலோன் ஏஜண்டுகள் :—M. O. A. கனி & கோ., 96, சதாம்ஸ் ரோடு, கோட்டை, கொளும்பு

தி இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ் : " இந்தியன் பாங்க் பில்டிங்ஸ் " வடக்குபீச் ரோடு, மதராஸ்

லோகல் ஆபீஸ்கள் ; எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு மயிலாப்பூர், தியாகராயநகர், புரஸவாக்கம், எழும்பூர்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 53,00,000
ரிசர்வ் நிதி	ரூ. 60,72,602

★

சகல விதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

ஹோமியோபதி

வைத்தியம் சாலச் சிறந்தது. இதைத் தமிழில் தபால் மூலம் தங்கள் வீட்டிலிருந்தே படித்துத் தேர்ச்சி பெற்று நீங்கள் டாக்டராகலாம். முழு விபரங்கள் அடங்கிய இலவசப் பிரகடனத்திற்கு எழுதவும்.

தென் இந்தியாவின் பிரதான ஹோமியோபதி ஸ்தாபனம்:

விலாசம்:—

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட்

(1939-ல் ஸ்தாபிதம்)

கும்பகோணம்

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள். **நம்பர் 80 வரை நூல்கள்.**

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக் கேற்ற கோன் நூல், மில் நெசவுக் கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காசிக்கல் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கானவாஸ் முதலியவைகளுக் கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள் எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை. நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

தற்போது நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ளதால், நூல் தேவையானவர்கள் தங்கள் மாகாணம் அல்லது சமஸ்தான டெக்ஸ்டைல் கண்ட்ரோல் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

மானேஜர்கள்: ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.

REGD. NO. M. 4392

License No. 18
Licensed to post without prepayment



பம்பாய் ஆபீஸ்: 142, ஓல்டு மோதி ஸ்ட்ரீட், போர்ட். இலங்கைக்கு சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
மெஸர்ஸ். துரை. அருள் & கோ., லிட்., 93, கெய்ஸர் தெரு, கொழும்பு